திராவிடநாடு

4–10–59 | வார வெளியீடு | விலை 16 காசு

தூங்காதே!

—[சோ. கண்ணப்பன்]—

என்னருமைத் தோழா நீ எண்ணிப்பார்
ஏங்குகின்ற தமிழ்மகனே விழித்துப்பார்
உன்னருமைத் தமிழதனின் நிலையைப்பார்
ஓங்குபுகழ்ச் சங்கமுடன் வள்ளுவனும்
தன்னிகரே யற்றபெரு மிளங்கோவும்
சார்ந்திருந்த தமிழகத்தின் கதியைப்பார்
மன்னுபுகழ்ச் சோலையிலே மந்திகள்போல்
மற்றவர்கள் செய்கின்ற கொட்டம்பார்!

தூங்கியது போதுமப்பா தமிழ்மகனே
தருக்கர்தமைச் சிதறடிக்கப் புறப்படுவாய்
பாங்குடைய உரிமைதனைக் காப்பதற்குப்
பண்பாடிப் போர்துவங்கி! எதிர்ப்பவரை
வீங்கச்செய் விரட்டிடுநீ தளராதே
வீரர்வழி வந்திப்போ பூனையைப்போல்
தூங்காதே! துயர்களையப் படைதிரட்டு
துடிதுடித்துத் திராவிடத்தைக் காத்திடுநீ!

வந்தவருக் கிடமளித்து வாழவைத்தாய்
வாழ்விழந்து நாடிழந்து வாடுகிறாய்
பந்தயத்துக் குதிரைபோ(ல்) அவர்களெல்லாம்
பசியின்றிக் கொழுத்துநிதம் வாழ்கின்றார்
சொந்தமுடை உன்னாட்டுச் சோதரர்கள்
சோறின்றி வீதியிலே மாள்கின்றார்
சிந்தையினிற் துடிப்பின்றி வாழாதே
செந்தமிழா உணர்வின்றித் தூங்காதே!

முத்தொள்ளாயிரக் காட்சிகள்

—[எ. கலைமுகிலன்]—

சேரநாடு, செந்நெல்லும், செங்கரும்பும் செழித்து வளர்ந்து வளங்கொஞ்சம் நாடு. எழிலுறத் திகழும் பொழில்கள்; அப்பொழில்களைச் சுற்றி அழகுமணி ஆரம்போல் அணிசெய்துகொண்டிருக்கும் பொய்கைகள்! அப்பொய்கைகளை அடுத்து, அடுக்கடுக்கானமாளிகைகள்; அம்மாளிகையின் உள்ள 'கலகல,'வென ஒலி எழுப்பிக் களிப்படையும் காரிகைகள்; இத்தனையும் பெற்றுச்சித்தங்குளிரவைக்கும் செல்வத் திருநாடாய் இன்பத் திருவீடாய் திகழ்ந்துகொண்டிருக்கிறது, சேரநாடு.

சேரன் என்றதுமே செத்து மடிவோர் பலர்; சித்தங் குலைந்து பித்தம் தலைக்கேற பிதற்றித்திரிவோர் சிலர்; செயலிழந்து செய்வதறியாது ஓடிவந்து அடிபணிந்து கிடப்போர் பலர்!

ஆம். சேரன், செகம் போற்றும் வீரனாகத் திகழ்ந்துகொண்டிருந்தான்; சிற்றரசர் பலர் திறை செலுத்தித் தங்கள் தங்கள் நாட்டைக் காத்து வந்தனர்.

இந்நிலையில், சிற்றரசன் ஒருவன் மட்டும் இறைசெலுத்த மறுத்துரைத்தான்!

செகமஞ்சப் போரிட்டுப் பெருவெற்றி பெற்றுத் திகழ்ந்துகொண்டிருந்த கொங்குநாட்டுப் புரவலனும் சேரனின் உள்ளம் கொதித்தது! உதடுகள் துடிதுடித்தன; உடல் பதைபதைத்தது; ஆயினும், நிலைமையைச் சமாளித்துக்கொள்ள முயற்சிகள் செய்துகொண்டிருந்தான்.

ஆனால், அந்தத் தூதுவன் கொண்டுவந்த செய்தி...! கொட்டும் தேளாக — நச்சரவமாகத் தோன்றியது. அடுத்தவினாடி...... கண்கள் சிவந்தன! மூச்சிலே...... நெருப்புப் பொறிகள் பறந்தன!

"தானைத் தலைவரே! சேரன் கோதையென்றதுமே போதையேறியவன்கூடச் சிந்தித்துச்செயல்படுகிறான்! சிதைந்தோடும் சிற்றெறும்புக் கூட்டமாம் அடுத்த நாட்டுச் சிற்றரசன் தன் தானைகொண்டு என்னைத் தாக்க வந்துள்ளான்! போ, இப்போதே சென்று குருட்டு மதியினர்க்கு நம் வீரத்தை விளக்கிக் காட்டி எச்சரித்து வா!'' என்று தானைத் தலைவனுக்குக் கட்டளையை விட்டெறிகிறான் கோதை.

கோதையின் ஆணையை ஏற்று, வேற்று நாட்டினின்றும் சிறுநரிக் கும்பலைச் சிறுத்தைக் கும்பலென எண்ணிப் புடைசூழவந்திருந்த சிற்றரசனையும், அவன் படைகளையும் பார்த்துக் கோதையின் வீரத்தையும், சேரநாட்டு வீரர்களின் தீரத்தையும் எடுத்துரைக்கத் தொடங்கினான்!

"இறை செலுத்த மறுத்தோரே! போர் யானை பலவற்றைத் தானையிலே கொண்டிருக்கும் கொற்றவரே! மரணத்தை முத்தமிட்டு மகிழ நினைத்திருந்தால், உறையிலே உறங்கிக்கொண்டிருக்கும் உடைவாளை உருவி வேலை தாருங்கள்! இல்லையேல், எம் மன்னவரின் தாள்பணிந்து இறைசெலுத்தி வாழுங்கள்! தொல்லைகொடுத்து ஒல்லையிலே மடிந்துபோகாதீர்கள்! விண்ணும் வணங்குகிறது எம் மன்னவரை! நீங்கள் பொங்கிவரும் எங்கள் படைமுன் எம்மாத்திரம்? வண்ண மலர்களுக்கிடையே வாடாத நறுமலரை அணிந்த விண்ணே, சேரனைக்கண்டு 'என்னை விட்டுவிடு. பணிந்துவிட்டேன்' என்பதுபோல் பூட்டிய வில்லை ஏற்று வாழ்கிறது. மண்ணுலகில் வாழ்கின்ற நீங்களும் விண்ணைப் போலவே எம்மன்னவரின் பூட்டிய வில்லை, நும் கோட்டைச் சுவரில் தீட்டி வாழுங்கள்! கொடியில் உள்ளவில்லை ஒல்லையிலே பொறித்துக்கொண்டு பூரிப்போடும், பார் போற்றச் சீரோடும், சிறப்போடும் வாழுங்கள்! வாழும் வழியறியாது வதைபட்டுப் போகாதீர்கள்!" என்று இடிமுழக்கமிடுகிறான்!

இந்தக் கருத்தைத் தன்னுள் அடக்கிக்கொண்டு அழகுறத் திகழ்கின்ற பாடலை, ஈண்டு புலவர் வாயிலாகக் காண்போம்.

பல்யானை மன்னீர் படுதிறை
தந்(து) உய்மின்
மல்லல் நெடுமதில் வாங்குவில்—பூட்டுமின்
வள்ளிதழ் வாடாத வானோரும் வானவன்
வில் எழுதி வாழ்வார் விசும்பு.

(முத்தொள்ளாயிரம்)

சேரநாட்டு வீரன் தன் வீரவுரையை—தீரமுழக்கத்தை முடித்தது தான் தாமதம்.........பீரங்கிக் குண்டு வெடித்ததுபோல், எதிர் முனையிலே, நின்றுகொண்டிருந்த படைத் தலைவனிடத்தினின்றும் வார்த்தைகள் வெளிவரத் தொடங்கின.

"சேரநாட்டு வீரரே! நும் வீரவுரைக்கும், நும் மன்னவரின் மாண்பிற்கும் எங்கள் மதிப்பும், மரியாதையும்! போரெனில் பூரிக்கும் குணம் படைத்தவர்கள்தான் நாங்களும்! போரென்றால் பேய்க்காற்றென காததூரம் செல்லும் திறமில்லாதவர்களல்ல நாங்கள்! போர்! அதில் வெற்றி; அல்லது வீர மரணம்! இன்றேல் திறை செலுத்துவது நிறுத்தப்படவேண்டும்!'' என்று எதிர் முழக்கமிடுகிறான்.

செய்தி எட்டியது சேரனின் செவிக்கு! செந்தேள் கொட்டிய துடிதுடிப்பும், பதைபதைப்பும் கொண்டான்! பற்கள் 'நறநற'வென ஒலி கிளப்பிக்கொண்டிருந்தன!

(4-ம் பக்கம் பார்க்க)

நல்ல அறிகுறி

18] ஆண்டுச் சந்தா ரூ. 8. (4—10—59) தனிப் பிரதி 16-காசு [இதழ் 12

அதிகாரங்கள் அனைத்தையும் வடக்கே குவித்து வைத்திருக்கும் 'வாய்ப்பைப்' பெற்றுள்ள டில்லி ஆதிக்கம்' தென்னகத்தை எப்படி எப்படியெல்லாம் அடக்கியும் அடிமைப்படுத்தியும் ஆளுகின்றதென்பதை நாம் அவ்வப்போது—அது செய்யும் ஒவ்வொரு கொடுமைகளையும் காணும்போது எடுத்துக்காட்டி, டில்லியின் பிடியில் தென்னகம் இருக்கும் வரையில் நாம் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காணவோ அடையவோ முடியாதென்பதைத் தக்க ஆதாரங்களோடு கூறி வருகிறோம்.

டில்லியின் பிடியில் இருந்து தென்னகம்—திராவிடம் விடுபட்டுத் தனித்தியங்க வேண்டுமென்று நாம் கூறி வருவதைச் சிலர்—ஏன்—எதிர் முகாமில் இருக்கும் எல்லோருமே தவருகக் கருதிக்கொண்டு, "பார் பார், நாட்டைத் துண்டாடப் பார்க்கிருர்கள்—துவேஷத்தை வளர்க்கிருர்கள் — ஒற்றுமையைக் குலைக்கிருர்கள்'' என்றெல்லாம் பேசி, நாம் கூறுவதிலுள்ள உண்மையை உணர மறுக்கிருர்கள்.

தமிழகம்— ஆந்திரம்— மலையாளம்— கன்னடம் ஆகிய நான்கு பகுதிகளும் பொருளாதாரத் துறையில் மிக மிகப் பின்தங்கியிருப்பதற்குக் காரணம், டில்லி இங்குள்ள பெரும் வருவாய் உள்ள இலாகாக்களை எல்லாம் தன் வசம் வைத்துக்கொண்டு, நம்மை—தென்னகத்தைத் வஞ்சிக்கிறது—வாழ வழியின்றிச் செய்கிறது. எனவே, முறையும்நெறியும் அற்ற இந்தப் போக்கை மாற்றியாகவேண்டும். அதற்கான ஒரே வழி, டில்லியின் பிடியில் இருந்து தென்னகம் விடுபடுவதுதான் என்று கூறுகிறோம்.

இந்த முடிவு வெற்றிபெற வேண்டுமானல் தமிழகம்—ஆந்திரம்—மலையாளம்—கன்னடம் ஆகிய நான்கு பகுதிகளும் ஒன்ருக இணைந்து செயலாற்ற முனையவேண்டும்; அதற்குரிய வாய்ப்பை உண்டாக்கவே திராவிட முன்னேற்றக் கழகம், அது தோன்றிய நாள்தொட்டுப் பாடுபட்டு வருகிறது. நான்கு பகுதிகளாகப் பிரிந்து நிற்கும் நாம் ஒன்ருக இணைந்து செயலாற்ற முற்படுவோமாயின், நிச்சயம் டில்லி தன் தவறை உணர்ந்துகொள்ளும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சென்னை, ஆந்திரா, மைசூர், கேரளம் ஆகிய நான்கு தென்னிந்திய இராச்சியங்களும் ஒன்ருேடு ஒன்று இணைந்து, முக்கிய பிரச்சினைகளில் கைகோர்த்துக் காரியமாற்ற வேண்டும். இதனுல், மத்திய சர்க்காரிடம் தென் இராச்சியங்களுக்குப் பொதுவான நல்ல பிரச்சினைகளைப் பலமாகவும், விளக்கமாகவும் வலியுறுத்திப் பெறமுடியும்"

இந்த வாசகம் திராவிட முன்னேற்றக் கழகத்தினராகிய நம்மால் வரையப்பட்டதோ கூறப்பட்டதோ அல்ல. ஆந்திர முதலமைச்சரும் காங்கிரசின் பெரும் புள்ளிகளில் ஒருவருமான தோழர் சஞ்சீவி (ரெட்டி) யார் உதிர்த்த முத்துக்களாகும். நான்கு இராச்சியங்களும் ஒன்ருக இணைந்து செயலாற்றினுல் எந்தப் பிரச்சினையையும் டில்லி அரசு உணரும்படி செய்யவும், உணர்ந்தபின் நம்முடைய தேவைகளைப் பெறவும் முடியும் என்று கூறுகிருர். நம்முடைய குரலில் வலிவும் பொலிவும் தெளிவும் ஏற்பட நான்கு இராச்சியங்களும் ஒன்ருக இணையவேண்டும். அப்போதுதான் டில்லி நம்மைத் திரும்பிப் பார்க்கும். இந்த உண்மையை நாம் பல காலமாகக் கூறி வருகிறோம். ஆனல், ஆந்திர முதலமைச்சர் போன்ற காங்கிரசுக்காரர்கள் இதுவரை இப்படிக்கூற முன்வராததற்குக் காரணம், அவர்கள் டில்லியின் ஆதிக்கப் போக்கை உணரும் வாய்ப்பைப் பெருமல் இருந்ததேயாகும். தந்தை தவறுசெய்தால் அதற்காகத் தனயன் கண்டிக்காமலிருக்கமுடியுமா? அதேநிலையைத்தான் இப்போது ஆந்திர முதலமைச்சர் போன்றவர்கள் பெற்றிருக்கிருர்கள். டில்லியின் போக்கையும் முறையையும் நம்மைவிட ஒரு படி மேலே சென்று கண்டிக்கத் தொடங்கியிருக்கிருர்கள்.

"நமக்கு (தென் மாநிலங்களுக்குள்) எந்தவிதமான கட்டுப்பாடும் தேவையில்லை. நம் தேவையை நாமே தீர்த்துக்கொள்வோம். வெகு தொலைவிலுள்ள டில்லியின் உதவி தேவையில்லை. தென் இராச்சியங்கள் தங்களுக்குள் எவ்வித வித்தியாசமும் ஏற்பட இடமளிக்கப்படமாட்டாது. எங்கோ தூரத்தில் —வெகு உயரத்தில் அமர்ந்து இருப்போரின் தயவு நமக்குத் தேவைப்படாது."

இவ்வளவு காரசாரமாக — ஆவேசமாக நாம்கூட இதுவரை பேசியது கிடையாது. ஆனல், ஆந்திர முதலமைச்சர் — காங்கிரசின் பெரும்புள்ளி சஞ்சீவியார் பேசுகிருர்.

வெகு தொலைவிலுள்ள டில்லியின் உதவி தேவையில்லை.

வெகு தூரத்தில்.

மிக உயரத்தில்.

அமர்ந்திருப்போரின் தயவு தேவையில்லை.

உதவி, தயவு எதுவும் தேவையில்லை என்று துணிந்து வெளிப்படையாகவே கூறுமளவுக்கு டில்லி தன் ஆதிக்கப்போக்கை அமைத்துக்கொண்டிருக்கிறதென்பதைத்தானே இது காட்டுகிறது.

"வடக்கே செய்வதை ஏன் தெற்கே செய்யக்கூடாது"

என்றும் கேட்கிறார்.

டில்லி எந்தத்திட்டத்தை வகுத்தாலும், முதலில் வடக்கினை மனதில் வைத்துக்கொண்டுதான் திட்டங்களைத் தீட்டுகிறதென்று நாம் கூறும் குற்றச்சாட்டை திரு. சஞ்சிவியார் இப்போது கூற முன்வந்திருப்பதைக்காண மகிழ்கிறோம்—பாராட்டுகிறோம். இது ஒரு நல்ல அறிகுறி என்று கூறி வரவேற்கிறோம். அவருடைய இந்த நல்ல போக்கும் முறையும் தொடர்ந்து அவருடைய கருத்துக்களைத் தொட்டுக்கொண்டு இருக்க வேண்டுமென்றும் விரும்புகிறோம். திராவிடம் தனியாகப் பிரிந்து, பொது வகையில் டில்லியின் உறவை வைத்துக்கொள்ளும் நாள் நெருங்கிவருகிறதென்பதற்கு இவையெல்லாம் ஒரு முன் அறிவிப்பாக அமைவதைக் கண்டும், நம்முடைய கொள்கை வீண் போகவில்லை என்பதை உணர்ந்தும் உவகை அடைகின்றோம். வெல்க திராவிடம்—வளர்க ஒற்றுமை.

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

வெடித்த எரிமலையிலிருந்து வெளிவருகின்ற குழம்புபோல் வார்த்தைகள் வெளிவரத் தொடங்கின!

"என்ன! மறுத்துவிட்டனரா இறைகட்ட? போர் தொடுக்கின்ற அளவிற்கு வந்துவிட்டனரா? பார்த்து விடுகிறேன் இவர்களை! இறை செலுத்திச் சிரித்து மகிழ வேண்டியவர்கள் சிற்றமுற்றுச் சிதைக்கத்தொழிய விரும்பி விட்டார்கள்! தயாராகட்டும் நம் படைகள்! படையெடுப்புடைசூழ வந்தோரைப் பாடைகட்டி அனுப்புங்கள்! கருத் திழந்துபோன திறமறியாரின் செருக்கொழியுங்கள்! தரையிலே உருளட்டும் தருக்கர்களின் தலைகள்! பொங்கியோடும் குருதியிலே குளித்து மகிழட்டும் குள்ளநரிக்கும்பலின் உடல்கள்! எடுத்திடுவீர் வாளை! தொடுத்திடுவீர் போரை!! மடித்திடுவீர் மாற்றரசை!!!"

வீரத்தைதீய விளையாட்டாகக் கொண்டிருந்த கொங்கு நாட்டுச் சிங்கங்கள் சீறிப் பாய்ந்தெழுந்தன! சிங்கமெனச் சீற்றமுற்றனர்! எடுத்தனர் வாளை! தொடுத்தனர் போரை!! வெற்றி — வீர மரணம் இரண்டில் ஒன்றெனும் முடிவால்!!!

இருதிறத்துப் படைகளும் களத்தே சந்தித்தன. போர்! போர்!! நடுங்கவைக்கும் கொடிய போராகத் திகழ்ந்தது! கைகளையும், கால்களையும், உடலையும், உறுப்புகளையும், தலையையும் இழந்து பயங்கரக் குரல் கொடுத்துக் குருதி வெள்ளத்தில் மிதந்தனர் பலர்!

வேலும், வாளும் வந்து தாக்க சூளுரைக்க முடியாது தாள் பணிந்து, அபயக்குரல் எழுப்பிச் சாய்ந்து படுவோர்... அப்பப்பா!... கொஞ்சமோ, எடுத்தெழுத? ஏராளம்! ஏராளம்!! எண்ணிலடங்காது!!!

வெற்றிபெற்று, இறை நீக்கிக் கொற்றவனென மற்றவர் போற்ற ஏற்றமுற இலங்குதற்கு எண்ண முற்றுச்சீற்றத்துடன் தானை தாங்கி வந்த சிற்றரசின் படைகள் பொடிப் பொடியாயின!

அவர்கள் அணிந்திருந்த மரகதப்பூணும், பருவயிரத் தோள் படைத்தோர் தாங்கிவந்த வயிரக் கடகமும் எங்கோ சென்றொழிந்தன! எல்லாம் எல்லையிலே சூறையாடப்பட்டு ஒழிந்தபின்னே, அக்களத்திலே காட்சியளித்துக் கொண்டிருந்தவை... வீரர்களின் உறுப்புக்களும் உடல்களும், யானை குதிரைகளுமதான்!

குறும்புத்தனம் புரிந்து பெரும் படையால் உருட்டிவிடப்பட்டோரின் சதைச் சடலங்களையேனும் சாக்காட்டில் விட்டுவைக்க விரும்பவில்லைப் போலும் நரிகள் கூட்டம்!

"ஆம்! போரிலே வீரமரணத்தை முத்தமிட்ட பத்தரைமாற்றுத் தங்கங்களின் அங்கங்களைச் சுவைத்து மகிழத்தொடங்கின நரிகள். அவ்வாறு அங்கங்களைப் பிய்த்துத் தின்றுகொண்டிருக்கும்போது வயிரக் கடகமொன்று நரிக்குட்டியின தலையில் பட்டதாம். பட்டதுதான் தாமதம்; பதறித் துடித்து ஓலமிட்டுக்கொண்டே ஓடத் தொடங்கியதாம் சிறுநரிக் கும்பல்! இறந்த வீரன் திரும்பவும் உயிர்பெற்று விட்டான் என்று எண்ணிக் கொண்டுதான் ஓடினவோ, என்னவோ, யார் அறிவார்கள்!

இந்தக் காட்சியைத்தான் எழிலுறச் சித்தரித்துக் காட்டுகிறது கீழ்வரும் முத்தொள்ளாயிரப் பாடல்:

"மரகதப்பூண் மன்னவர் தோள்வளை கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்—துயர்உழந்து
புண்ணுற்(று) அழைக்கும் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்."

இறை செலுத்த மறுத்தோரின் உயிர் உடலினின்றும் பிரித்தெடுக்கப்பட்டது. உயிரையே உயிலாக்கி உடைமைக்கு-உரிமைக்குப் போரிட்டு வீரமரணத்தை முத்தமிட்டிருக்கின்றனர் மறவர்கள்! பூரிப்பால் புவி மறந்திருந்த பூமிநாட்டுப்புரவலனைப் போருக்கழைத்து மரணத்தை மார்போடணைத்துக்கொண்டிருக்கின்றனர், இறை செலுத்த மறுத்தோர்!

இறை செலுத்த மறுத்து, துஞ்சும் புலியை வாலுருவி விட்டது போல் கோதையைத்தூண்டிவிட்ட மாற்றரசை, சிங்க ஏறுகிச் சீறிப் பாய்ந்து சின்னாபின்னமாக்கி, ஓடும் உதிர வெள்ளத்திலே நடந்துவந்து வெற்றி மங்கையைக் கட்டியணைத்து மகிழ்ந்துகொண்டான் கோதை!

கோதை மட்டுமா. கோபக்கனல் கொண்டு, தண்டெடுத்து சிற்றரசை தாக்கித் தரைமட்டமாக்கி மகிழ்ந்தான்? அவன் நாட்டுக் களிறுகள், கோதையையும் — அவன் கொண்ட ஆற்றலையும்—ஆவேசத்தையும் விஞ்சிவிடுகின்றன!

ஆம்! போர்முகத்தில் புல்லர்கள் பொடிப் பொடியாகி மடிந்துவிட்டனர் என்றாலும், அவர்களை அடித்துத் தோய்த்தும், முடிமன்னர்களின் முடிபறித்து அடியிலேயிட்டு அழித்தும், முத்துமணி மாலைகளை பிய்த்துச் சிதைத்தும் மகிழ்ந்த களிற்றினத்தின் ஆத்திரம் தணியவில்லையாம்!

(16-ம் பக்கம் பார்க்க)

ஓர் நகைச்சுவைக் கற்பனை நாடகம்

“பச்சோந்தி”-சுந்தரம்

காட்சி 1

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம், மானேஜர்.

சுந்தரம்:- (நடைபோட்டுக் கொண்டே) மானேஜர்! நம்ம பஞ்சாலை நல்லவிதமாக நடந்து வருகிறதா?

மானேஜர்:- நல்லவிதமாக நடந்து வருகிறது... நான் இருக்கிற வரைக்கும் குறைகூற முடியுமா?

சுந்:- அது இருக்கட்டும்... எனக்கு நீண்ட நாளாக ஒரு ஆசை இருந்து வருகிறது...

மானே:- என்னங்க முதலாளி அது...

சுந்:- இன்றைய தினம் சமுதாயத்திலே நான் ஒரு பெரும்புள்ளி தானே!...?

மானே:- யாருங்க சொன்னது இல்லேன்னு...

சுந்:- அதனாலே, நடைபெறுகிற பொதுத்தேர்தலிலே நிற்கலாம் என்று ஆசைப்படுகின்றேன்.

மானே:- தேர்தலிலே போட்டியிடுவதைப் பற்றியும் பிரச்சினை இல்லை; செலவு செய்வதைப் பற்றியும் பிரச்சினை இல்லை... ஓட்டுகள் உங்கள் பெட்டியிலே விழவேண்டுமே...... வெற்றி கிடைக்கணுமே...

சுந்:- என்னப்பா...... எடுத்ததும் அபசகுனம் மாதிரி...

மானே:- அபசகுனமா அரை இலட்ச ரூபாய் மிச்சம் என்று சொல்லுங்க...

சுந்:- அப்படின்னா... ஓட்டுக்கள் கிடைக்காதென்று சொல்கிறாயா?

நாடக உறுப்பினர்கள்:

சுந்தரம்: தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை அபேட்சகர். மாஜி “மாங்காய் ஊறுகாய்க் கம்பெனி முதலாளி.

மரகதம்: சுந்தரத்தின் மனைவி.

இராம கிருஷ்ணன்: சுந்தரத்தின் மானேஜர்.

இரத்தினம்: பிரமுகர்.

சீனிவாசன்: சிவன்கோவில் கும்பாபிஷேகத்திற்காக நன்கொடை வசூலிக்க வருபவர்.

அந்தோனிசாமி, **நடராஜன்**: தேர்தல் பிரச்சாரம் செய்பவர்கள்.

தேர்தலில் நிற்கவேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நின்றுதான் பார்ப்போமே...

மானே:- நீங்கள் நிற்பதைப்பற்றியும், நில்லாததைப் பற்றியும் நான் என்ன மறுப்புக்கூறவா போகிறேன்... பணம் படைத்த பக்கா ஆட்களெல்லாம் தேர்தலிலே போட்டியிட்டு மண்ணைக் கவ்விட்டாங்க... கௌரவத்தையும் இழந்துட்டாங்க... தேர்தல் என்றால் விளையாட்டுப் பொம்மையாவைத்துக்கொண்டு விருப்பப்படி விளையாடுவதற்கு? துணிவும், தைரியமும், கொள்கையும், சேவையும் வேண்டாமா?...

சுந்:- பணம் இருக்கிற வரைக்கும் ஒருகை பார்த்துவிடுவது என்றுதான் எண்ணுகிறேன்! தேர்தலினாலே ஒரு இலட்ச ரூபாய்தான் செலவழியட்டுமே! ஓட்டுக்களை விலைக்கு வாங்குவோமே!...... எனக்கு என்னவேர் என் அந்தஸ்திற்கு நான் ஒரு எம்.எல்.ஏ. ஆகவாவது இல்லாவிட்டால் அப்புறம் என்னதான் இருக்கு... கையெழுத்துப்போடத் தெரியாதவன், கணக்கெழுதத்தெரியாதவன் எல்லாம் ஆளுக்கு ஒரு பதவியை வைத்துக்கொண்டிருக்கும்போது; பிரபல மாஜிமாங்காய் ஊறுகாய்க் கம்பெனி முதலாளி, சுருட்டுத்தொழிற்சாலை சொந்தக்காரர், பஞ்சாலை பங்குதாரர், நெசவுத் தொழிற்சாலை உரிமையாளர் — இந்தச் சுந்தரம் சாதாரண ஆளாக இருப்பதா? இப்படி இருப்பது எனக்கே இழுக்கல்லவா? என்ன நினைக்கிறாய்?

மானே:- நினைப்பதற்கு என்னங்க இருக்கு...... உங்கள் விருப்பப்படியே செய்யுங்க...

சுந்:- டெபாஸிட் பணத்தை உடனே கட்டிவிடுகின்றேன்...

மானே:- வெற்றியடைந்தால், தங்களைப் பிடிக்கமுடியாது...

சுந்:- பிடிக்க முடியுமா?... எத்தனை பேர் பாஸ், பர்மிட், லைசென்ஸ், சர்ட்டிபிகேட் என்று என்னைச் சுற்றிக்கொண்டிருப்பார்கள், தெரியுமா?...

மானே:- எண்ணம் வெற்றிகரமாக நிறைவேற, மக்களது ஆதரவுதான் வேண்டும்! முதலாளிக்கு

ஆடுதுறை

அ. ஹபீப்முஹம்மது

ஆதரவாக இருப்பதில் ஆசையாகத்தான் இருக்கு, சம்பாதித்த பணத்திலே இப்படிக் கொஞ்சம்செலவழித்தால்தானே பேர் எடுக்க முடியும். நீங்கள் விரும்பியபடியே செய்யுங்கள். தங்கள் வெற்றி நமக்கெல்லோருக்கும் வெற்றிதானே...

சுந்:- பின்னே இல்லையா? என்னைப்பற்றி நாடு அறியும் நாள் வெகுதூரத்தில் இல்லை... இருக்கட்டும்!

காட்சி 2

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம், மரகதம்.

சுந்தரம்:- மரகதம்...! மரகதம்...! எங்கே போயிட்டாய்...

மரகதம்:- இதோ வந்துவிட்டேனுங்க...

சுந்:- அது என்ன பெரிய கட்டு...

மர:- இது தெரியாதுங்களா உங்களுக்கு? தேர்தல் விளம்பரங்கள் இன்னும் பாதி வரவேண்டும்.

சுந்:- எங்கே ஒரு விளம்பரத்தை எடுத்துப்படி...

[விளம்பரத்தை எடுத்துப் படிக்கப்போகிறாள்.]

சுந்:- மரகதம்! இப்படி, கிட்டே வந்து படிக்கக்கூடாதா?... அங்கேயே நிற்கிறாயே...வா இப்படி..

மர:- எப்ப பார்த்தாலும் அருகிலேயேதான் நிற்கவேண்டுமா? இளமை திரும்புதோ!

சுந்:- என்னடி நீகூட இப்படிப்பேச ஆரம்பிச்சுட்டே... எனக்கு என்ன வயசா ஆயிடுச்சு? இன்னும் மீசைகூட நரைக்கவில்லையே! என்னைப் பார்த்தால் உனக்கு வயசானவன் மாதிரியா தெரிகிறது......ம்... கிட்ட வந்து படி...

மர:- (அருகில் வந்து விளம்பரத்தைப்படிக்கிறாள்) மக்கள் தொண்டன் சுந்தரத்தை ஆதரித்து அவருக்காகக் கொடுக்கப்பட்டுள்ள "பச்சோந்தி" சின்னமுள்ள பெட்டியில் தங்களது மேலான வாக்குகளைப் போடுங்கள். நினைவிருக்கட்டும் பச்சோந்தி பெட்டி...

சுந்:- (பூரிப்புடன்) ...ம்... இன்னொரு சுவரொட்டியை எடுத்துப் படி...

மர:- இதோ படிக்கிறேனுங்க ... (விளம்பரத்தை எடுத்துப் படிக்கிறாள்) சேவைக்கென்றே வாழ்வைத் தியாகம் செய்யும் சுந்தரத்தை... ஐயயோ... உங்கள் பேரைச் சொல்லிவிட்டேனே.

சுந்:- சொன்னா என்னவந்துடுத்து? முதல் முறை சொன்னபோது ஞாபகம் வரவில்லை...... இப்பதான் ஞாபகம் வந்ததோ...ம்...ம் மேலே படி...

மர:- அப்படின்னா சரிங்க... "சுந்தரத்தை ஆதரியுங்கள்... பொது நலத்தொண்டையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கருதும் சுந்தரத்தை ஆதரியுங்கள்... பச்சோந்திப் பெட்டிகளை மேலான வாக்குச் சீட்டுகளால் நிரப்புங்கள்" (படித்துவிட்டு) நன்றாக இருக்கு தங்கள் தேர்தல் சின்னம்!... பச்சோந்தி!... வேடிக்கையாக இருக்கே!...

சுந்:- எவ்வளவோ சின்னங்கள் இருந்தும், எனக்கு இந்தச் சின்னம்தான் பிடிச்சிருக்கு...!

மர:- ஆமாம்!... சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளலாம் அல்லவா?...

சுந்:- அதெல்லாம் இருக்கட்டும்... ஆட்களெல்லாம்வந்ததும், இந்த விளம்பரத்தாள்களைப் பிரித்துக் கொடு, இன்னும் ஒரு வாரம் தான் இருக்கு — என்னுடைய தலைவிதியை நிர்ணயிக்க... சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டும்... சரி...சரி... நான் வெளியே போய்விட்டு வருகிறேன்...

மர:- அங்கேயே தங்கிவிடாதீர்கள் சீக்கிரம் வந்துவிடுங்கள்.

சுந்:- நல்லா இருக்கே நீசொல்வது! உன்னை இங்கே தனியாக விட்டுவிட்டு அங்கு இருக்க என்னால் முடியுமா? வேலை செய்யத்தான் முடியுமா? விரைவில் வந்து விடுகின்றேன்...

காட்சி 3

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம். மரகதம்.

[சுந்தரம் கம்பராமாயணத்திலிருந்து ஒரு செய்யுளை இராகத்துடன் பாடிக்கொண்டிருக்கிறார். மரகதம் பின்னால் வந்து நிற்கிறாள்.]

மரகதம்:- என்னங்க...சுவை ததும்பப் பாடிக்கொண்டிருக்கீங்க...

சுந்தரம்:- ஒன்றுமில்லை மரகதம்! கம்பராமாயணத்திலே இராமன் சீதையைக் கடைக்கண்ணால் பார்த்த பகுதியைப் பாடிக்கொண்டிருந்தேன். உனக்கு எங்கே இதில் எல்லாம் மனம் நாடப்போகின்றது? சினிமாப் பாடல் என்றால் ஜாலியா பாடிக்கொண்டிருப்பே...ம்...

மர:- அது இருக்கட்டும்... ஏங்க... கிடைத்துவிடுமா? எனக்குச் சந்தேகமாகவே இருக்கே...

சுந்:- என்னடி இப்படிக் கேட்கிறே! எவ்வளவு செலவுசெய்து வாக்காளர் பெருமக்களை நேரில் கண்டு, பேசி, கொடுத்து வந்திருக்கிறேன். இனி இந்தத் தொகுதியிலே எவனும் இந்தச் சுந்தரத்தை அசைக்க முடியாது! ஆமாம்...

மர:- ஒரு வாரம் கழித்தல்லவா தெரியப்போகிறது!

சுந்:- வெற்றி விழா கொண்டாட்டத்தில் பாட்டுக்கச்சேரி, நடனம், டீ பார்ட்டி முதலானவை நடத்துவதற்குக்கூட முன் பணம் கொடுத்துவிட்டேன்...

மர:- ஏன் அதற்குள் கொடுத்தீர்கள்? முடிவைத் தெரிந்து கொண்டு கொடுப்பதுதானே!

சுந்:- கடைசி வரைக்கும் உனக்குச் சந்தேகம்தானா? முடிவு தான் நமக்கு பாதகமாக, இல்லை, இல்லை. சாதகமாக அமையப் போவுதே... மீண்டும் என்ன தயக்கம்...

மர:- நடனத்திற்கு யாரை வரவழைக்கப் போகிறீர்கள்?

சுந்:- பத்மாவை வரவழைக்கலாம் என்றுதான் இருந்தேன்; அப்புறம் நண்பர்கள் எல்லாம் சொன்னாங்க, என்னப்பா இருந்து இருந்து பத்மாவையா வரவழைக்கிறது? வத்சலாவை வரவழைக்கக் கூடாதோ? வத்சலாதானே தற்சமயம் மேல்நாடுகளுக்கெல்லாம் சென்று வந்தவள் என்று கூறினார்கள். அப்புறம் யோசனை செய்தேன்; சரி நண்பர்களின் ஆசையைத் தான் கெடுப்பானேன் என்று எண்ணி வத்சலாவையே நடனத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டேன். (குழைந்துகொண்டே)

எனக்குக்கூட வத்சலா நடனம் என்றால் உயிர்தான்...ஹி...ஹி

மர:- வாயெல்லாம் பல்லாகத் தெரிகிறதே... அப்ப தேர்தல் வெற்றியைப்பற்றி கவலேயே பட வேண்டாம்...

சுந்:- நீ ஒன்றும் கவலேப்படாதே... எல்லாம் வெற்றிகரமாகவே நடைபெறும்... இன்னும் கொஞ்ச நாளில் நீ எம். எல். ஏ. சுந்தரம் மனைவி மரகதம்... ஞாபகம் இருக்கட்டும் ஆமாம்... பச்சோந்திப் பெட்டியைா மறப்பவர்கள் நிச்சயம் பச்சோந்திக் கூட்டமாகத்தான் இருக்க வேண்டும்.

மர:- நல்ல விளம்பரங்கள் செய்ய வேண்டும்... பணத்தைப் பணம் என்று பாராமல் செலவு செய்தால்தான் பச்சோந்திப் பெட்டிகளில் ஓட்டுகள் விழும்.

சுந்:- முழுமூச்சோடுபோட்டியிட்டுச் செலவு செய்யவேண்டும். நான் ஒரு எம். எல். ஏ. ஆக வந்து விட்டால் எத்தனைகார், மோட்டார் சைக்கிள், சைக்கிள் நம் வாசலைத் தேடிக்கொண்டு வரும் தெரியுமா? தேர்தல் முடிகிற வரைக்கும் எனக்கு ஓய்வு ஏது? உணவு ஏது? தூக்கம் ஏது? இதே கவலே தான்.

மர:- பிரச்சாரம் பலமாக இருக்க வேண்டுங்க...

சுந்:- என்ன மெதுவாகச்சொல்றே! அதற்காகத்தான் ஏராளமான பணம் ஒதுக்கிவிட்டேனே! தேர்தலே முன்னிட்டு இரண்டு கார்கள்கூட வாங்கியிருக்கிறேனே...

மர:- அன்றைக்கு நாம் இரண்டு பேரும் ஜாலியா கடற்கரைக்குக் காற்று வாங்க ஏறிக்கொண்டு போனேமே! அந்தக்காரா?

சுந்:- ஆமாம் அதே கார்தான்...

மர:- வெற்றியைப்பற்றிக் கவலேயே கொள்ளவேண்டாம் என்று சொல்லுங்க...

சுந்:- இந்தத் தொகுதி பூராவும் நம்ம பக்கம்தான், தொழிலாளர்கள் ஓட்டுக்களில் முக்கால்வாசி எனக்குத்தான்—நெசவாளர்கள் ஓட்டுகளில் அரைவாசி நம் பக்கம்தான்—ஹரிஜனங்கள் ஓட்டுக்களேப்பற்றிக் கவலேயே பட வேண்டாம்—கொண்டுவந்து தள்ளிவிடுவான்கள். அந்த அளவுக்கு வழிசெய்து வைத்திருக்கிறேன்......என்ன மரகதம் புரியுதா?

மர:- அப்ப என்னங்க! வெற்றி நமக்குத்தான். வாங்கபோவோம் உள்ளே.

காட்சி 4

இடம்: கடைவீதி.

உறுப்பினர்கள்: அந்தோனிசாமி, நடராஜன்.

[தேர்தல் பிரச்சாரம் நடைபெறுகிறது]

அந்தோனி:- வாக்காளர் பெருமக்களே! தோழர்களே! தாய்மார்களே! நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலிலே இந்தத் தொகுதியிலே சுயேச்சையாகப் போட்டியிடும் சுந்தரத்தை ஆதரித்து அவருக்காகக் கொடுக்கப் பட்டிருக்கும் "பச்சோந்தி" சின்னமுள்ள பெட்டியிலே உங்களது உயிரினும் மேலான வாக்குச் சீட்டுகளேப்போட்டு அவரை வெற்றிபெறச் செய்யுங்கள்! சுந்தரம் அவர்கள் பொதுநலவாதி! பொது மக்கள் நலனுக்காகவே பாடுபடுபவர். தயாள குணம் படைத்தவர்! சேவை செய்வதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கருதும் எண்ணம் கொண்டவர்! ஏழைகளின் தோழன்! பாட்டாளிகளின் கூட்டாளி! ஆகவே தோழர்களே! தாய்மார்களே! மறந்துவிட வேண்டாம் பச்சோந்திப் பெட்டியை! எங்கள் ஓட்டு,

நடராஜன்:- பச்சோந்தி சுந்தரத்திற்கே...!

அந்:- பச்சோந்தி சின்னம் கொண்ட சுந்தரத்திற்கே என்று சொல்லப்பா...

நட:- சரி......சரி....வா போவோம் வேறு இடத்திற்கு...

அந்:- என்னவோ ஐயா இந்தத் தொகுதியிலே நிற்கிருரு! என்ன ஆகப்போவுதோ......ம்......நமக்கென்ன! வேலே செய்கிறவரைக்கும் நமக்குச் சில்லறை...வா போவோம்.

காட்சி 5.

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம், மரகதம்.

சுந்தரம்:- மரகதம்! என்ன இன்னிக்கு ஒரே பர்சனலிட்டியா இருக்கே...பவுடரும் ஸ்னேவுமாக...ம்...

மரகதம்:- (நாணிக்கொண்டே) அப்படி ஒன்றும் அதிகமில்லீங்க.

சுந்:- இப்பதான் நீ அழகாக இருக்கே...ஹி...ஹி...

மர:- எனக்கு மாங்காய் மாலே வாங்கித் தருவதாகச் சொன்னீர்களே! எப்ப வாங்கிப்போடப் போறீங்க...

சுந்:- தூக்கத்திலேயும் விழிப்பிலேயும் உனக்கு நகைப்பைத்தியம் தானு......இருக்கின்ற நகைகளே எடுத்துப்போட்டுக்கொள்ளேன். தலேயிலிருந்து கால்வரையிலும் தங்கத் தகட்டாலே உன்னே அலங்கரித்தாலும் ஆசை தீராதே...சரி...சரி...தேர்தல் முடிந்து, முடிவு தெரிந்தபின் கேளு...வாங்கிப்போடுகிறேன்...

மர:- மறந்துவிடாமல் வாங்கிப் போடவேண்டும், ஆமாம்...

சுந்:- நான் மறந்தாலும் நீ மறப்பாயா? அது இருக்கட்டும். தேர்தல் விஷயமா வெளியே போய்ச் சில பிரமுகர்களேப் பார்த்து வரவேண்டும்...வரட்டுமா மரகதம்...

மர:- நானும் உங்களோடே வருகிறேனுங்க...

சுந்:- மரகதம்! அந்த அளவுக்கு நாடு இன்னும் முன்னேறவில்லே; நீ இங்கேயே இரு...

மர:- நான் வரக்கூடாதா...?

சுந்:- வருகிறதைப்பற்றிப்பிரச்சினே இல்லே...... நீ வந்தால் வருகிற கொஞ்சம் ஓட்டுக்களும் வராமல் போய்விடும் என்றுதான் பார்க்கிறேன்...

மர:- என்னேப் பார்த்தால் அப்படியா தோணுகிறது...... நான் அழகாக இல்லேயா... இனிமேல் நான் எங்கேயும் வரவில்லே...ம்... (கண்களேக் கசக்குகிருள்.)

சுந்:- அதுக்குள்ளே என் கண்மணிக்குக் கோபம் வந்துவிட்டது... என்ன செய்கிறது! இன்னெரு சமயம் அழைத்துக் கொண்டு போகிறேன்...(கிட்டே சென்று தலேயைத் தடவிக் கொண்டே) மரகதம் போய்வரட்டுமா...ஹி...ஹி...

மா:- யாராவது நம்மைப்பார்த்தால் சிரிக்கப்போருங்க...

சுந்:- சிரிப்பாங்க!... அங்கங்கேயும் அவரவர்களும் இப்படித்தான் செய்துகொண்டிருப்பாங்க...... அதையெல்லாம் பார்த்தால் முடியுமா? யாரும் செய்யாததை நாம் செய்துவிட்டோம். வருகிறேன்...

மா:- போய்வாங்க...

[சுந்தரம் சிட்டி அடித்துக் கொண்டே செல்கிருர்.]

காட்சி 6

இடம்:- பிரமுகர் இரத்தினம் வீடு.

உறுப்பினர்கள்:- சுந்தரம், இரத்தினம், மானேஜர்.

இரத்தினம்:- வாங்க... வாங்க... ஏது இவ்வளவு தூரம்...

சுந்தரம்:- உங்களைப் பார்க்கலாம் என்றுதான் வந்தேன்...

இரத்:- உட்காருங்க...

சுந்:- பரவாயில்லீங்க ...ம்... நான்தான் இந்தத் தொகுதியிலே போட்டியிடும் சுயேச்சை அபேட்சகன் சுந்தரம்... சின்னம் பச்சோந்தி—மறந்துவிடாதீர்கள்—ஏழைகளுக்கு நிறையச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உண்டு—வெற்றி பெற்றவுடன் முதல் வேலையாக இந்தத் தொகுதி வாக்காளர்களின் குறைகளைத்தான் கவனிக்கப் போகிறேன். அப்புறம் ஆசிரியர்கள் எல்லாம் என்னிடம் வந்து முறையிட்டுக்கொண்டார்கள். "இதுவரையிலும் எந்த எம். எல். ஏ.யும் ஆசிரியர்களைப் பற்றிச் சட்ட சபையிலே பேசவில்லை, நீங்களாவது போய் எங்களுடைய குறைகளைக்கூறிக் குறைந்தது ரூ. 150/- சம்பளம் கிடைக்கவாவது வழிவகை செய்யுங்கள்" என்று பரிதாபத்துடன் கூறினார்கள். ஆகையினாலே ஆசிரியர்களுடைய குறைகளைக் கவனிப்பதாகவும் உறுதிகொண்டிருக்கின்றேன். நெசவாளர்கள் படும் துயரங்களுக்காகவும் என்னுலே முடிந்த உதவிகளைச் செய்யலாம் என்று இருக்கின்றேன், அப்புறம் தெருவெல்லாம் ஒரே அருவருப்பாக இருக்கிறதே என்று தெருவுக்குள்ட்டுப்பாம்பே கழிப்பிடங்கள் கட்டித் திறக்கவும் ஏற்பாடு செய்யப்போகின்றேன். இன்னும் என்னென்னவோ செய்யத் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கின்றேன். மறந்துவிடவேண்டாம் பச்சோந்திப் பெட்டியை; தங்களைப் போன்றவர்களின் ஆதரவுதான் எனக்குத் தேவை, நினைவிருக்கட்டும்...ஹி...ஹி...

இரத்:- நல்லதுங்க...என் சார்பாக 111 ஓட்டுக்கள் இருக்கின்றன... அதை அப்படியே உங்களுக்குப் போட்டுவிடுறேனுங்க... அந்தப் பக்கம் நான் வைத்ததுதான் சட்டம். ஓட்டுக்களைப்பற்றி நீங்கள் கவலையே படவேண்டாம்...மற்ற ஓட்டுகளோடு சேர்த்து 111-யும் போட்டுவிடுகின்றேன்...

சுந்:- அப்ப இந்தாங்க... (பணத்தைக் கொடுக்கிருர்)

இரத்:- எதுக்குங்க... (பணத்தைப் பெற்றுக்கொள்கிருர்)

சுந்:- அட! சும்மா இருக்கட்டுங்க! கவனம் இருக்கட்டுங்க...

இரத்:- நீங்கள் கவலையே அடைய வேண்டாம்... பணம் கொடுத்துவிட்டீர்கள் அல்லவா... நீங்கள் போங்க, எல்லாவற்றையும் நான் கவனித்துக்கொள்கிறேன். எது இல்லாதுபோனுலும் 111ஐ நிச்சயமாகப்போட ஏற்பாடு செய்கிறேன்... உங்கள் வெற்றி என் வெற்றி மாதிரி. என்னைப்பற்றித் தாங்கள் பிறகு தெரிந்து கொள்வீர்கள்!

சுந்:- என்னவோ... உங்களைப் போன்றவர்களை நம்பித்தான் இந்தத் தொகுதியிலே நிற்கிறேன்... கையை விரித்து விடாதீர்கள்... அப்ப நான் வரட்டுங்களா? ஞாபகம் இருக்கட்டும், மிகத் துரிதமாக வேலை நடைபெறவேண்டும்.

இரத்:- தைரியமாக இருங்க...என்னைப் பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம்... நான் நல்ல விதமாகப் போட்டுவிடுகிறேன், போங்க...

சுந்:- வெற்றி விழா கொண்டாடுவதற்குக்கூட ஏற்பாடுகள் செய்துவிட்டேன்...

இரத்:- பின்னே என்னுங்க! தைரியமாகப் போய்வாங்க!

சுந்:- வருகிறேம்... வணக்கம்... (சற்றுத்தூரம் சென்று) மானேஜர்! இங்கே கொடுத்த ஐந்நூறையும் குறித்துக்கொள்!...

மானே:- செலவுதான் மேலே மேலே போய்க்கொண்டிருக்கு; எங்கே போய் நிற்கப்போவுதோ; யாரு கண்டா?

சுந்:- நிற்கிற இடத்திலே நிற்கட்டும், கணக்கைக் கவனமாக எழுதிவை. தேர்தல் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு நீயும் பணத்திலே கையை வைத்துவிடாதே!?

மானே:- சும்மா இருக்கிறவனெல்லாம் பணத்தைப் பார்க்கும் போது நானும் கொஞ்சம்?!... ...ஹி...ஹி...

சுந்:- நன்ருக இருக்கே... கவனமாக எழுதிவையப்பா... பிறகு பார்த்துக்கொள்ளலாம்...ம்...... இதுவரையிலும் எவ்வளவு ஆகியிருக்கும்?

மானே:- என்ன ஆயிடுச்சு!... 98 ஆயிரம்தான் ஆயிருக்கு!!

சுந்:- ம்...?...! இலட்சத்திற்கு இரண்டாயிரம்தான் குறைச்சலா? இருக்கட்டும்!... இருக்கட்டும்!!

மானே:- பணம் எவ்வளவு செலவானுல் என்னங்க?... எப்படியாவது வெற்றியடைந்தால் சரிதான்!...

சுந்:- அதுதான் நமக்கு வேண்டியது!... வா போவோம்!...

காட்சி 7.

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம், நன்கொடை வசூலிக்க வருசீனிவாசன்.

சினிவாசன்:- வணக்கம்...சுந்தரம் பிள்ளைவாள்...

சுந்தரம்:- யார் நீங்கள்...

சினி:- சிவன் கோவில் கும்பாபிஷேகம்...

சுந்:- யார் நீங்கள் என்ருல், சிவன் கோவில் கும்பாபிஷேகமா? அதுதான் பார்த்தவுடனே தெரியுதே... எங்கே வந்தீங்க...

சீனி:- நன்கொடை வசூலிக்க வந்தோம்...உங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் தயவுதான் தேவை... ஹி...ஹி...

சுந்:- ஹி...ஹி...நான் என்னங்க பெரிய மனிதன்! என்னைவிடப் பெரிய பெரிய ஆளுங்க எல்லாம் இருக்காங்க...நூறுரூபாய் நோட்டு அடிக்கிறவர்களெல்லாம் இருக்

தாங்க, அவர்களைவிட நான் என்ன பெரிய மனிதன்...தேர்தலிலே போட்டியிடுவதனாலே பெரிய மனிதன் என்று சொல்லிவிட முடியுமா...? அது இருக்கட்டும், எவ்வளவு போடவேண்டும்?

சீனி:- தங்களுக்குத் தெரியாதோ... பிள்ளைவாள் மனசு வைத்துப் போட்டா நான் மறுப்புக் கூறுவேனு என்ன?

சுந்:- எனக்கு, சிவன் கோவில் கும்பாபிஷேகம், பெருமாள் கோவில் கும்பாபிஷேகம் என்றால் அளவு கடந்த ஆர்வம்; அதுவும் இந்தச் சமயத்திலே எனக்கு எல்லையில்லா ஆர்வம். எதுக்கும் 300-ரூபாய் எழுதுகிறேன்...நல்ல காரியமாக இருக்கு...ம்...(எழுதிப் பணத்தைக் கொடுக்கிறார்) இந்தாங்க, ஞாபகம் இருக்குல்ல...

சீனி:- எதைக் கேட்கிறேள்? கும்பாபிஷேகம் தேதிதானே! புரட்டாசி மாதம் 20-ம் தேதி...

சுந்:- கும்பாபிஷேகம் தேதியைக் கேட்கவில்ல. நான் தேர்தலிலே நிற்கும் விஷயம்...ஹி...ஹி...

சீனி:- என்ன இப்படிக் கேட்டுட்டேள்...எனக்கு அவ்வளவு தூரம் புரியாதா என்ன?

சுந்:- கொஞ்சம் கவனித்து ஏற்பாடு செய்யுங்க. பட்டாச்சாரிகள், பக்த கோடிகள், இங்குப் பரதேசிகளில் வாக்குரிமை பெற்றவர்கள், ஆகியோர்கள் ஓட்டுக்களெல்லாம் நம் பெட்டியில் விழுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அதற்காகத்தான் இந்தச் சமயத்திலே தொகையைக் கூடக் கூடுதலாகப் போட்டேன்... ஹி...ஹி...

சீனி:- அதையெல்லாம் நன்று கவனித்துடறேன், போய் வரட்டுங்களா...

சுந்:- போய் வாருங்கள், ஒன்று ஞாபகம் இருக்கட்டும். நம்ம பேரைக் கும்பாபிஷேகப் பத்திரிகையிலே பெரிய எழுத்திலே எழுதி விளம்பரம் செய்யுங்க ....ஒலிபெருக்கியிலே நம் பேரைச் சொல்லும் போதும் சோடாவைக் குடித்துக் கொண்டே உரத்துக்கூற ஏற்பாடு செய்யுங்க...

சீனி:- நன்னா சொன்னேள் போங்கோ...300-ரூபாய் நன்கொடையாக வாங்கினதிற்கு இதைக்கூடச் செய்யவில்லையென்றால் அப்புறம் என்னதான் இருக்கு? பிள்ளைவாள் வரட்டுங்களா....

சுந்தரம்:- ஆஹா...போய் வாங்க...

[சீனிவாசன் வெளியே சென்றபின்]

மானேஜர்:- நன்கொடை வசூலிக்க வருகிற நேரத்தைப்பாரு...வெளியிலே கிளம்புவதற்கே பயமாயிருக்கே......ஆளுக்கு ஒரு நன்கொடை நோட்டை எடுத்துக் கொண்டு கிளம்பி விடுறாங்களே! வெளியிலே தலை காட்ட முடியவில்லையே...சேச்சே...

சுந்:- அவர்களுக்கு இதுதானே சமயம்...நான் பணம் கொடுத்ததின் நோக்கமே வேறு.

மானே:- அவ்வளவுதூரம் புரியாதவனு நான்? ஹி...ஹி...இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன முடிவு தெரிய...

சுந்:- என்ன ஆகப்போகிறதோ நம்பிக்கையோடுதான் இருக்கிறேன், பார்ப்போம்...

காட்சி 8

இடம்: கடைவீதி.

உறுப்பினர்கள்: நடராஜன். அந்தோனி சாமி.

நடராஜன்:- என்னுண்ணே... முடிவு நம்ம ஐயாவுக்குப் பாதகமாக வந்துவிட்டதே! சுந்தரம் தேர்தலிலே மண்ணைக் கவ்விட்டாரண்ணே... வருத்தமாயிருக்கு.

அந்தோனிசாமி:- தோற்காமல் ஜெயிக்கவா போகிறார்? இவரெல்லாம் தேர்தலிலே நிற்கலாமா? இவரை யாருக்குத் தெரியும்? பணம் இருந்தால் நின்று விடுவதா? கட்சியும், கொள்கையும் நேர்மையும் இல்லாமல் நின்றால் மக்கள் ஓட்டுகளைப் போட்டுவிடுவார்களா?

நட:- ஐயோ பாவம்! பிரச்சாரம் நல்லாத்தான் செய்தோமே...

அந்:- செய்தோம்... எதுக்காகச் செய்தோம்... சில்லறைக்குத்தானே! இவர் ஜெயித்து வர வேண்டுமென்று வேலைசெய்தோம்? விட்டுத் தள்ளுறியா... என்னமோ பேசிக்கொண்டிருக்கே!

நட:- பாவம்! மனசு ரொம்ப வேதனைப்படுவார்...

அந்:- வேதனைப்படுகிறார், சோதனைப்படுகிறார், நமக்கென்ன? நமக்கு வேண்டியது வெள்ளிப் பணம். இந்தத் தேர்தலிலே எனக்கு ரூ 400 மிச்சம் இங்க மாதிரி ஆட்களெல்லாம் நிற்பதால் தானே நம்மைப் போன்றவர்கள் ஏதோ இந்தப் பணத்தையாவது பார்க்க முடிகிறது.

நட:- ஆமாண்ணே... ஆமாம்... சுந்தரம் வாழ்க! உங்களைக் கொண்டு நாங்களும் வாழ்க! அடுத்த தேர்தலிலே யார் இது மாதிரி நிற்கப் போறாங்களோ?... நமக்கெல்லாம் யோகம் அடிக்கப் போவுதே! அங்கே போய் ஒட்டிக் கொள்வோம்.

அந்:- தேர்தலுக்குத் தேர்தல் ஒரு பெரும்புள்ளி நிச்சயமாகப் போட்டியிடும். நம்மபாடுஜாலிதான் ...ம்... நம் கொள்கையே அட்டை மாதிரி ஒட்டுவதுதானே! அடுத்த தேர்தலிலே சந்திப்போம்... போய் வருகிறாயா?

நட:- வருகிறேன் ... அடுத்த தேர்தலிலே என்னை மறந்துவிடாமல் சேர்த்துக்கொள்.

காட்சி 9

இடம்: சுந்தரம் வீடு.

உறுப்பினர்கள்: சுந்தரம், மரகதம், மானேஜர்.

[சுந்தரம் தேர்தலில் தோற்றதின் காரணமாக முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் உட்கார்ந்திருக்கிறார்... அதுசமயம் மரகதம் வருகிறாள்].

மரகதம்:- உங்களைத்தானே...என்ன பேசாமல் உட்கார்ந்திருக்கிறீங்க..?

சுந்தரம்;- ஏண்டி பறக்கிறே...?

மர:- அந்த மாங்காய் மாலை என்னங்க ஆச்சு...

சுந்:- உனக்கு மண்டையிலே ஏதாவது இருக்கா? இதுதான் நேரமா உனக்கு? மனுஷன் வெந்துபோய் வேதனையோடு உட்கார்ந்திருக்கிறான், இவளுக்கு மாங்காய்மாலை கேட்குது மாங்காய்மாலை மூஞ்சியைப்பார்! இப்பத்தான் வந்து கொஞ்சறு! ம்...ம் போ அந்தப் பக்கம்...

மர:- என்னங்க நடந்துவிட்டது?

சுந்:- என்ன நடக்கவேண்டும்!... இவ்வளவு மோசமாக மக்கள் நடந்து கொள்வார்கள் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. காலை வாரிவிட்டுவிட்டார்களே! பணத்தை அள்ளி வீசினேன்! கண்ட பலன்! பச்சோந்திப் பெட்டி காலியாக இருந்ததுதான் மிச்சம்... நல்லா சாப்பிட்டானுங்க. இதோ இருக்கு அதோ இருக்கு என்று சொல்லி ஆளையே மொட்டை அடிச்சிட்டானுங்க!

மர:- தோற்று போய்விட்டீர்கள்.....! ஐயயோ...(அழுகிறாள்)

சுந்:- நீ ஏண்டி அழுறே? நான் அல்லவா அழவேண்டும்.

மர:- அதனால்தான் அப்பவே சொன்னேன், தேர்தலில் நிற்காதீர்கள் என்று கேட்டாத்தானே!

சுந்:- தேர்தலில் நின்றதனால் என்னடி வந்துவிட்டது? ஒவ்வோருத்தனும் நிற்கவில்லே? இப்படி எல்லோரும் பச்சோந்திகளாக மாறுவார்கள் என்று தெரியுமா எனக்கு? அப்படி இப்படின்னு ஒரு இலட்ச ரூபாய் போன இடம் தெரியவில்லே. அட, செலவு செய்ததுதான் போகட்டும்! டெபாசிட் பணமும் அல்லவா போயிட்டுது; அவமானம்! பெருத்த அவமானம்! வெளியில் நான் எப்படித் தலையைக்காட்டுவேன்! முகத்தில் கரியைப் பூசிவிட்டார்களே!

மர:- நான் சொன்னல் கேட்டாத்தானே! பிடிவாதமாக நின்றீர்கள்! கடைசியிலே இப்படி ஆயிடுச்சு... இந்தக் காலத்தில் மக்கள் பணத்தையா பார்க்கிருர்கள்! குணத்தையல்லவா பார்க்கிருர்கள்...

சுந்:- என் குணத்திற்கு என்னடி குறைச்சல்! பணம் இல்லேயா? படிப்பு இல்லேயா? பண்பு இல்லேயா? சேவை மனப்பான்மை இல்லேயா? எது இல்லே? இந்தப் பச்சோந்திகள் கூட்டத்தை நம்பி இறங்கினல் இதே கதிதான்!

மர:- நல்ல படிப்பினே நமக்கு... நம் பணமெல்லாம் இப்படியா பாழாகப் போகணும்...!

சுந்:- என்ன நோக்கத்தோடு உன் அப்பன் எனக்கு ஒரு இலட்ச ரூபாய் எழுதிவைத்தானே, உன்னே நான்காம் தாரமாகக் கல்யாணம் செய்துகொண்டதற்கு உன் அப்பன் எழுதிவைத்த பணமெல்லாம் இப்படிப் போவுதுடி... பார்த்துக்கோ!

மர:- அப்பா நல்ல நோக்கத்தோடு தான் எழுதி வைத்தார்... நீங்கள் ஆழந் தெரியாமல் காலேவிட்டு மாட்டிக்கொண்டு தோற்றுப் போனல், அவர் என்ன செய்வார்?

சுந்:- இனித் தேர்தல் பக்கமே திரும்பிப் பார்க்கக் கூடாது... வேண்டுமென்றே பச்சோந்திக் கூட்டங்கள் செய்த காரியமாக இருக்குமோ? செல்வாக்கையும், கௌரவத்தையும் இழந்ததுதான் மிச்சம்!

மானே:- தேர்தலுக்காகச் செலவு செய்த பணத்தைக் கொண்டு ஒரு மருத்துவ மனே கட்டினலும், நம் பெயர் என்றென்றும் நிலேத்திருக்கும் ... வருகிறவர்கள் அத்தனே பேரும் வாழ்த்திக் கொண்டாவது செல்வார்கள்...

சுந்:- இந்த யோசனே எல்லாம் தேர்தலில் தோற்றபிறகல்லவா வருகிறது!

மானே:- இனிமேலாவது திடீரென்று எக்காரியத்திலும் இறங்கிவிடாதீர்கள்?

சுந்:- டெபாஸிட் பணத்தை இழந்த பிறகுமா இனிமேல் நான் அது மாதிரி நடந்துகொள்வேன்! சில படிப்பினேகளேப் பணத்தைஇழந்து தானே கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது... இனி வருத்தப்பட்டுப் பயன்!

மானே:- போதும் இந்தச் சமுக சேவை மனப்பான்மை!... இவர்களிடம் ஓட்டுப் பிச்சையும் கேட்க வேண்டாம்! இவர்கள் பரிதாபத்தைப் பார்க்கும்போதெல்லாம் பல்லிளிக்கவும் வேண்டாம்! உண்மையான சேவை செய்பவனுக்கா ஆதரவு கிடைக்கும்! பிளாக் மார்க்கெட்காரர்களுக்குத்தானே ஆதரவு அமோகமாகக் கிடைக்கிறது.

சுந்:- அதையெல்லாம் ஏம்பா பேசுறே? நடந்தது நடந்துவிட்டது, இனி நடக்கவேண்டியதைப்பற்றிப் பேசுவோம்! வெற்றிவிழாக்கொண்டாடுவதற்கு முன்பணம் கொடுத்ததும் போச்சு... அந்த ஸ்டார் வத்சலா நம்மைப்பற்றி என்ன நினேத்துக்கொள்ளுதோ...? வெத்து வேட்டு... 'எம்டி'டிக்கெட் எல்லாம் தேர்தலில் நிற்க ஆசைப்பட்டுப் பணத்தை இப்படிப் பாழாக்குதே என்றுதான் எண்ணிக்கொண்டிருக்கும்... அதை நினேத்தால் வேறு வெட்கம் பிடுங்கித் திங்கிறது...நாம் ஒன்று நினேக்க, மக்கள் ஒன்று செய்ய, நிலேமையே தலேகிழாகப் போய்விட்டது... பதவியும் வேண்டாம்... சேவையும் வேண்டாம்... ஒரு வெண்டைக்காயும்வேண்டாம்.

மானே:- இனிமேலாவது நம் நிர்வாகத்தை ஒழுங்காகக் கவனிப்போம்! மனதைப்போட்டு அலட்டிக்கொள்ளாதீர்கள்...

சுந்:- எனக்கு இந்த உலகமே மாயை நிறைந்ததாகக் காணப்படுகிறது... மரகதம்!!

மா:- போட்டியில் தோல்வி கண்டவர்களுக்கு அப்படித்தான் தோன்றும்... உலகம் மாயையாக இருந்தால் நாமெல்லாம் இங்கே இருக்க முடியுமா?...

சுந்:- தேர்தல் வந்ததும் சில கூட்டம் கிளம்பிவிடுகிறது பார்த்தாயா? பணத்தைச் சுருட்டிக்கொள்ள! ஒரு பிரமுகன் 111 ஓட்டுகள் இருக்குன்னு சொன்னன். போடுவதாகவும் சொன்னன். கடைசியிலே என்னடான்ன நாமத்தைக் குழைச்சு நெற்றியிலே 111ஆகப் போட்டுவிட்டான்... சிவன்கோவில் கும்பாபிஷேகம் என்று வந்தான். எனக்கு அவனேப்பார்க்கும்போதே சந்தேகம். அவனும் பட்டையாகப் போட்டுவிட்டான்...நான் கொடுத்த பணத்திற்கு நாமக்கட்டியும், விபூதிப் பொட்டலமும்வாங்கி எனக்கே பயன்படும்படிசெய்துவிட்டானுங்க ... கொடுத்த பணத்தைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்தான? இல்லே அவனது கும்பிக்கு அபிஷேகம் செய்துகொண்டான என்றும் புரியவில்லே... பட்டை போட்டவனும், கொட்டை அணிந்தவனும் சேர்ந்துகொண்டு கடைசியிலே என்னே மொட்டை அடிச்சிட்டானுங்க... அவனுங்க ட்ரேட்மார்க்கையெல்லாம் என்கிட்டே கொடுத்துவிட்டுப் பணத்தைச் சுருட்டிக்கொண்டு போயே போய்விட்டானுங்க...ஏன்தான் இந்தப் பிழைப்புப் பிழைக்கிருனுங்களோ! எனக்குப் போட்டிருந்த தொங்கியெல்லாம் அவன்களுக்கு போடஆரம்பித்துவிட்டுதே ...நான் தேர்தலிலே நின்றதினலே எத்தனேபேர் புதுப்பணக்காரனக மாறியிருக்காளே... யாரு கண்டா ...ம்...

மர:- பணம் கொடுத்து ஓட்டுகளே வாங்குவதனல் வருகிறகேடு...

சுந்:- நான்தான பணம் கொடுத்து ஓட்டுக்களே வாங்கினேன் என்னேப் போல் கொள்கையில்லாமல் தேர்தலில் நிற்பவர்களில் முக்கால் வாசிப்பேர் அப்படித்தான் செய்கிருர்கள்! ம்... எப்படியாவது பிழைத்துப் போகட்டும்...கை நீட்டிப் பணம் வாங்கியதற்காவாவது ஓட்டுப் போடவேண்டாம்! நன்றி கூட இல்லேயே! குழையக் குழையப் பேசிக் கடைசியிலே குழி தோண்டிப் புதைத்து விட்டார்களே!

மர:- அப்படியும் சிலர் இருப்பதாலே பணம் படைத்தவர்கள் எல்லாம் மீண்டும் தேர்தலில் நிற்காமல் இருந்துவிடுகிருர்களா?

சுந்:- அந்தப் பேச்சே வேண்டாம்... பச்சோந்திப் பெட்டியிலே நெருப்பை அள்ளிக் கொட்டு... பற்றிக்கொண்டு எரியட்டும்... தேர்தல்! எனக்கென்று ஒரு சின்னம்! என் பணத்தைப் பிடுங்கி வயிறு வளர்க்க என்று ஒரு கூட்டம்! என்ன நயவஞ்சக உலகம்...?...

மர:- வெற்றி பெற்றவனே நாட்டை ஆளட்டும்... நயவஞ்சகம் அத்தனேயும் செய்யட்டும்... குட்டிச்சுவராப்போகட்டும்.... நமக்கென்ன... இதிலே ஈடுபட்ட வரைக்கும் போதும்... இதோடாவது விட்டார்களே! ஆளேக் கடைசி வரைக்கும் மொட்டை அடித்து ஆண்டியாக்காமல்... இனிமேலாவது நம் காரியத்தை ஒழுங்காகக்கவனிப்போம். உயிர் போகிற வரைக்கும் தேர்தல் பக்கமே தலே வைத்துப் படுக்க வேண்டாம்...

மர:- அப்படித்தாங்க... செய்ய வேண்டும்... போனல் போவுது வாங்க... கடற்கரைக்குப் போவோம்...

சுந்:- இவளுக்கு எப்பப் பார்த்தாலும் கடற்கரை ... சரி...சரி... வா போவோம்...

★

சரித்திரத்திலே திராவிடர்கள்?

—(பி. வி. கிரி)—

"திராவிடம்'' — இது தமிழ்ச் சொல்லா? இல்லை, வெறும் கற்பனை! என்றெல்லாம் ஒன்றும் புரியாத, தெரியாத பேதையர்கள் பிதற்றுகிறார்கள். இவர்களுக்குச் சரித்திரம்தான் சான்று பகரும். திராவிடர்கள் யார்? அவர்கள் எப்போது, எங்கே, எப்படி வாழ்ந்தார்கள்? அவர்கள் நாகரிகம் எப்படி? கலை, பண்பாடு எந்த வகையிலே சிறப்புற்றிருந்தது? என்பன போன்ற பற்பல கருத்துக்களைச் சரித்திரத்தின் வாயிலாக, கல்வெட்டுகளின் மூலமாகப் பேராசிரியர்கள், பன்மொழிப் புலவர்கள் தமது ஆராய்ச்சி நூல்களிலே பரக்கக் கூறியுள்ளார்கள். அவைகளையெல்லாம் படிக்கும்போது பழங்குடி மக்களின் வரலாற்றுண்மைகள் தெரிய வருகின்றன- தமிழர் தம் உள்ளமெல்லாம் பூரிக்கின்றன. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களும், பன்மொழிப் புலவருமான திரு. கா: அப்பாதுரையார், எம். ஏ. எல். டி. அவர்களும், திரு. தேவநேயப் பாவணர் அவர்களும் "திராவிடம்'' தமிழ்ச் சொல்லே என்று காரணங்காட்டிக் கூறியிருக்கிறார்கள். கவி அரவீந்திரநாத் தாகூரும் 'திராவிடம்' என்ற சொல்லைத் தாம் இயற்றிய கவிதையிலே சேர்த்திருக்கிறார்கள். 'திராவிட உத்கல வங்க' என்று அவர் பாடிய பாடல்தான் இன்று 'தேசிய கீத'மாகப் பாடப்படுகிறது. இப்படிப் பாடிக்கொண்டே திராவிடம்' கற்பனை என்று கூறுகிறார்கள்!

மனோன்மணியத்தில் பேராசிரியர் திரு. சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ்த்தாய் வணக்கத்தில்,

"தெக்கணமும் அதிற்சிறந்த திரவிட நற்றிருநாடும்'' என்று புகழ்ந்து கூறுகிறார். தமிழகத்தின் தலைசிறந்த ஆராய்ச்சி வல்லுநர்களும்: மேலை நாட்டுப் பேராசிரியர்களும் திராவிடத்தையும்' திராவிடர்களையும்பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் படித்து இன்புறத்தக்கனவாம். அவைகளில் சில காண்போம்!

"ஆரியர் இந்தியாவை அடைந்தபோது, திராவிடர் சிறந்த நாகரிகமுடையவர்களாயிருந்தார்களென்று இருக்கு வேதம் கூறுகின்றது. திராவிடர் அரண் செய்யப்பட்ட நகரங்களில் வாழ்ந்தார்கள்; உலோகங்களில் செய்த அணிகலன்கள், திண்மையான ஆயுதங்கள், ஆடுமாடு முதலான திரண்ட செல்வம் உடையவர்களாகவும், மாய வித்தையறிந்தவர்காயுமிருந்தனர்''.

— ந. சி. கந்தையா பிள்ளை
"உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு" பக்கம் 33, 34.

•

"தமிழர்— இந்தியாவின் தென்கிழக்குப்பாகத்திலும்இலங்கையின் சில பகுதிகளிலும் வசிப்பவர்கள்; ஆரியரல்லாத திராவிட வம்சத்தைச் சேர்ந்தவர்கள்''

"தமிழ் — மேற்சொன்னவர்களால் பேசப்படும் மொழி''

— சர். ஜேம்ஸ் மர்ரே'
"புதிய ஆங்கில அகராதி" பக்கம் 67.

•

திராவிடரின் படகு செலுத்தும் தண்டு சத்தகம் எனப்பட்டது. இது வட்ட வடிவுடையது. பாய், பாய்மரம் முதலியன திராவிடப் பெயர்களே. நங்கூரம் என்பதும் திராவிடச் சொல்லே. ஓடம், ஓதி, தோணி, தெப்பம், கலம், கப்பல் முதலிய சொற்கள் வெவ்வேறு வகை மரக்கலங்களைக் குறிக்கின்றன.

— ந. சி. கந்தையா பிள்ளை.
"உலக நாகரிகத்தில் தமிழர் பங்கு" பக்கம் 48.

•

"19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீராவிக் கப்பல்கள் புதி

தர்க் உலகில் ஏழும்வரை, உலகின் சிறந்த கப்பல்களும், மிகப் பெருங் கப்பல்களும் தென்னகத்தில் செய்யப்பட்ட திராவிடக் கப்பல்களே. வெள்ளையர் திராவிடத் தச்சர்களைத் தம் நாட்டுக்குக் கொண்டு சென்றுதான், கீழ்த்திசைக் கப்பல்களை ஆட்கொள்ளும் அளவு தம் கப்பல் படையைப் பெரிதாக்கிக் கொண்டனர் ஏன்பதை, முக்கர்ஜி என்பாரின் 'இந்தியக் கப்பல் தொழிலும் கடலோடி வாழ்வும்" என்ற வரலாற்றாராய்ச்சி ஏடு எடுத்துக் காட்டுகிறது!!

— கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி.
"இதுதான் திராவிடநாடு"
பக்கம்: 35, 36.

•

திருவாவடுதுறை மடத்து வித்துவானாயிருந்த சபாபதி நாவலர் 'திராவிடப் பிரகாசிகை' என்ற ஒரு நூலை எழுதினார். 'திராவிடப் பிரகாசிகை' பழைய முறையில் ஆற்றலுடன் எழுதப்பெற்ற ஓர் ஆராய்ச்சி நூல்''

— ஏ. வி. சுப்பிரமணிய அய்யர்.
தற்காலத் தமிழ் இலக்கியம்."

•

"வடமொழி வழக்கில் திராவிடம் என்ற சொல் தனிப்பட்ட தமிழைக் குறிக்கவே வழங்கிய சொல் ஆகும். சிவஞான முனிவர் சிவஞான போதத்துக்கு எழுதிய தமிழ்ப் பேருரை திராவிடமா பாடியம் (த்ராவிட மஹா பாஷ்யம்) என்றும், ஆழ்வார்கள் நாலாயிரமும் தேவார திருவாசகமும் முறையே திருமால் நெறியினராலும் சிவநெறியினராலும் திராவிட வேதம் என்றும் கூறப்படுதல் காண்க''

— கா. அப்பாதுரையார்,
"வருங்காலத் தமிழகம்"
பக்கம்: 31.

•

'தமிழ்' என்பதைத் தமிழ் மொழியொன்றிற்கே சிறப்பாக அமைந்த பெயராகக் கொண்டு, தென்னாட்டில் வழங்கும் தமிழுந்தெலுங்கும் உள்ளிட்ட பல மொழிகளையுங் குறிக்கும் ஓர் இன மொழியாகத் "திராவிடம்" என்பது பரந்துபட்ட பொருளில் கொள்ளக் கிடப்பது காலங் கண்டதொன்றாகும்"

— "கால்டு வெல் ஒப்பிலக்கணம்,"
பக்கம்: 9.

★

வாத்தியார் வையாபுரி

—(ஜி. ஜி. தனராசன்)—

நேற்று வையாபுரியாரைச்சந்தித்தேன். வையாபுரியார் வேறு யாருமல்ல; வாத்தியார் வையாபுரிதான். காலம் தன்னைத் தாழ்வாக மதிக்கின்ற காரணத்தால் மனமுடைந்திருந்தார். என்றாலும், அவர் கருத்தெல்லாம் கல்வியிலும், குழந்தைகள் மீதும்தான்.

ஆதாரக் கல்வி என்றும் அடிப்படைக் கல்வி என்றும் அரசாங்கம் வருணிக்கின்றது. காந்தியார் கண்ட கல்வி என்று காங்கிரஸ் பெருமை கொள்ளுகிறது.

ஆடிப்பாடி அகமகிழ்ச்சியோடு கற்கவேண்டியகுழந்தைகள் இராட்டையையும், பஞ்சையுமே தினசரிப் பாடத்தில் கண்டு, வெறுத்துவாடுகிறார்கள் என்கிறார்.

"விரும்பிச்செய்யும் செயல்களைக் குழந்தைகள் ஆர்வத்தோடு செய்யும். விளையாடுவதில் குழந்தைகள் அதிக ஆர்வமுடையவைதான், என்றாலும் என்னும் ஒரே விளையாட்டை அவை விரும்புவதில்லை" என்றார்.

கல்விக்கு மதிப்பளிப்பவர்தான் வையாபுரி. முன்பு ஒரு நாள் குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஆற்றுப் படுகைக்குச் சென்றார்—பூகோளப்பாடத்தைநேரில்கண்டுணரும் முறையில் விளக்க. வேடிக்கையாகவும் விளையாட்டாகவுமே பாடம் நடந்தது. சிறிது நேரத்திற்குள் குழந்தைகளின் கவனம் களிமண்ணை உருட்டி விளையாடுவதில் திரும்பியது. குழந்தைகளோடு தானும் அதிக உற்சாகத்தோடு களிமண்ணை உருட்ட ஆரம்பித்துவிட்டார். ஒரு கோபுரம் செய்தார், கலசங்கள் வைத்தார். தஞ்சைப் பெருங்கோயிலும் — சோழ மன்னனும் பாடமாக வந்தன. கதையும், களியாட்டமும் அங்கு கற்றலின் நெறியாக இருந்தது.

"தள்ளாத வயதில் உங்களுக்கு ஏன் இந்தப் பொல்லாப்பு" என, என் போன்ற ஆசிரியப்பணிபுரியும் அவரின் பழைய மாணவர்கள் சொல்வோம். அப்போது தான் அவருக்குக் கோபம் வரும். "இளைஞர்களாகிய உங்களுக்கு என்னைக் காட்டிலும் இதில் ஆர்வம் அதிகம் இருக்கவேண்டும். நீங்கள் அக்கறையற்றிருக்கிறீர்களே" என்பார்.

சற்று அமைதியாக இருப்பார். சலிப்போடு ஓர் பெருமூச்சு விடுவார். "வளர்ச்சியடைந்த கல்விக் கொள்கைகள் உங்களுக்கு மறைக்கப்படுகின்றன, பதிலாக தவறான கொள்கைகள் அழகாக வருணிக்கப்படுகின்றன." சற்றுக் கனைத்துத் தொண்டையைத் தீட்டிக் கொள்வார். ஓரிருவர் நல்ல கொள்கைகளை நிலைநாட்ட முயற்சித்தாலும், அதற்கு இடையூறு செய்து அழித்துவிடுவார்கள். நமது நாட்டில் செயல் திட்ட முறையில் இயங்கிவந்த, ஒரே ஒரு ஆசிரியப் பயிற்சிப் பள்ளியும் ஆதரவற்று அழிந்துவிட்டது--வைணவப்பெரு வள்ளல், சிவ ஆலயத் திருப்பணிக்குச் செயலாற்ற மறுத்துவிட்ட கதைபோல, கல்வி மேதைகள் என்போர், காந்தியாரின்கல்வியைப் பார்த்த கண்களால் அந்தச்செயல் திட்ட முறையின் சிரிய நோக்கங்களைப் பார்க்க மறுத்துவிட்டார்கள் போலும்" என்று வருத்தத்தோடு முடிப்பார். அதற்குள் அவர் தொண்டை அடைத்துக் கொள்ளும்.

வஞ்சிப்பாளையத்து உயர்தர ஆரம்பப் பள்ளியில் பள்ளிச் சீர்திருத்த மாநாடு நடத்த ஏற்பாடு செய்தார்கள். இரண்டொரு மாதங்களாக, அந்தப் பள்ளியின் ஆசிரியர்கள் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தனர் — மாணவர்களோடுகூட. பாடம் கெடுகிறது, மாணவர்கள் கெடுகிறார்கள், கல்வி அதிகாரிகள் தங்கள் பெயரையும், புகழையும் பெருக்கும் விளம்பரத்திற்கான வேலைகளில்தான் அக்கறை காட்டுகிறார்களே தவிர, பள்ளிகள் மாணவர்களுக்குத் தரமிக்க கல்வியளிக்கின்றனவா? எதிர்காலக் குடிமகனுக்குத் தேவையான பண்பை வளர்க்கின்றனவா என் பதிலெல்லாம்போதிய கண்காணிப்புச் செய்வதில்லை.

இப்படியெல்லாம் இரந்து பொருள் சேர்க்கும் முயற்சி மாணவர்களின் உள்ளத்தைக் கெடுக்கும் —முயன்றுஉழைக்கும் தன்னம்பிக்கையை அழிக்கும்—ஏற்பது இகழ்ச்சி என்று போதித்துக் கொண்டே இப்படிப்பட்ட செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்துதல் கீழ்த்தரமான செயல்என்றெல்லாம் வையாபுரியார் கூறுகிறார்.

"மதிய உணவுத் திட்டத்தில் இப்போது எழுபது மாணவர்களுக்கு உணவளிக்கிறார்களாமே?" என்று ஒரு நாள் கேட்டேன். அழமாட்டாக் குறையாக, "ஆசிரியர்களும் கெட்டுவிட்டனர்" என்றார். எனக்குச்"சுருக்"கென்றது! ஏதோ ஓர் பள்ளியில் மாணவர்களுக்கு உணவளிக்காமலேயே உணவளித்ததாகக் கணக்குக்காட்டி மானியத் தொகை பெற்றுவருவதாக என் நண்பன் கு. ரா. ப. கூறினான். அந்த நினைவு என்னுள் எழுந்தது. எத்தனையோ கிராமங்களில் இருக்கும் பள்ளிகள் ஆசிரியரும் பிள்ளைகளும் இல்லாமலே நடந்து வருகின்றனவாம்!

வையாபுரியார், "என்ன தம்பி கவனிக்கிறாயா!" என்று கேட்டுக் கொண்டே மேலும் பேசிக்கொண்டு போனார். "பள்ளி விவரங்களும், கணக்குகளும் பொய்யாகின்றன." என்றார். "நேர்மையும், பண்பும் கெட்டுவிட்டன" என்றேன். "இல்லை; கெடுக்கப்படுகின்றன," என்றார்.

"அறநெறிகளுக்கு அடங்குவதா! அதிகாரிகளுக்கு அடங்குவதா என்ற கேள்வி இன்றுள்ள எளியவர்கள் எல்லோரின் முன்னும் நிற்கிறது என்றார். "மேலிடத்தின் நன் மதிப்பைப் பெறுவதுதானே இன்றைய வளர்ச்சி, முயற்சி, வாழ்க்கையின் குறிக்கோள்," என்று பரிதாபமாகக் கூறினார். என்ன நினைத்தாரோ அதற்குள் பத்திரிகையைப் படிக்க ஆரம்பித்தார். உரத்த குரலில் பள்ளியில் பாடப்புத்தகத்தைப் படித்துப் போதிப்பது போலவெ பத்திரிகையையும் படிப்பார். அது அவரது பழக்கம்.

"தென் உணவு மண்டலத்தை கலைக்க டெல்லி மறுப்பு, கோவையிலுள்ள மேட்டுப் பாளையத்தில் காகித ஆலை கட்டப்படமாட்டாது" தொழில்மந்திரி அறிவிப்பு. செய்திகளைப் படித்தவர் திடீரென்று கல்விக்கூடங்களில் பாரபட்சம் காட்டுவதைக் கண்டிக்க ஆரம்பித்துவிட்டார். ஆதாரக் கல்வியில் பயிற்சி பெறுபவர்களுக்கு அதிகப்ப

யான உதவித் தொகை அளிப்பது போன்றவை அவருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கின்றது.

காம்ரேட் கைலாசநாதர் அப்போது அங்கு வந்தார். 'முன்பெல்லாம் மதப் பிரச்சாரங்களுக்குப் பள்ளிகள் பயன்பட்டன. அரசும் பள்ளியை நடத்தும் தனியாரும் தங்களின் வாழ்வு கெடாமலிருக்க மாணவர்களை முறையே அரசியலில் தவறான கொள்கைகளையும் அறிவியலில் தவறான கொள்கைகளையும் போதித்து வந்தனர்'' என்று வையாபுரியார் கூறியதைக் கைலாசநாதர் கண்களை மூடியபடி ஆமோதித்தார். அது அவருடைய நெடுநாளைய பழக்கம். மாஸ்கோவில் அப்படி இப்படி என்று கல்வித்துறையிலும் தமக்கு ஆராய்ச்சி இருப்பதாகக் காட்டிக் கொள்ள முயன்றார் காம்ரேட்.

வையாபுரியார் விடவில்லை. "அங்கு இருப்பது இருக்கட்டுமையா, இங்கு இருப்பதைப்பற்றி என்ன சொல்கிறீர்?'' என்று அழுத்தமாகக் கேட்டார். கைலாசநாதரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

கேரளத்துக் கல்வி மசோதாவைப் பற்றியும், மத குருக்களைப் பற்றியும், மன்னத்து பத்மநாபனைப் பற்றியும், சுற்றி வளைத்து ஏதேதோ சொன்னார்—மணிப்பவளப் பிரசங்கியாருக்கே மருட்சியைத் தரும்—தமது தனி நடையில். "அட இருமையா ஆதாரக் கல்வியைப்பற்றி என்ன சொல்கிறீர்?'' என்று மீண்டும் கேட்டார்—நேரடியாகப் பேசாமல் நீட்டி முழக்கிய காம்ரேட்டுக்கு நெருப்பின்மீது நிற்பது போலிருந்தது.

"அடுத்த ஊரில் கூட்டம். நான்தான் பேசுகிறேன். 'கம்பன் கண்ட பொதுவுடைமை,'' என்பது பற்றி. மனுவும் மாந்தாவும் மார்க்ஸ் கூறிய கொள்கைகளை, முன்னமேயே அறிந்திருக்கிறார்களா என்பதை, ஆராய்ச்சியோடு கூறப்போகிறேன்,'' என்று கூறியபடி நடையைக் கட்டினார் காம்ரேட்.

வையாபுரி கவலையோடு கூறினார். "கல்வியைப்பற்றி எழுதுபவர்கள் குறைவு; பேசுபவர்கள் குறைவு; கடமையுணர்வும், கண்ணியப்பண்பும் கொண்ட ஓரிருவரைத் தவிர, மற்றவர்களெல்லாம் காங்கிரசுக்காகவோ, காந்தியாருக்காகவோதான் கல்வி என்று நினைப்பார்கள் போலிருக்கிறது. உதவாக்கரைத் திட்டங்களுக்கெல்லாம் "ஆமாம்சாமி'' போடுகிறார்கள். நேரடியாக எதிர்த்துப் பேசும் நெஞ்சுரம் இல்லாதவர்களுக்குப் பதவி ஒரு கேடா?'' என்று பற்களைக் கடித்த வையாபுரியார் பத்திரிகையில் கவனத்தைப் பதித்துக் கொண்டார். "மைல் கல்லில் இந்தி'' அவர் மௌனமாகப் படிக்க ஆரம்பித்து விட்டார்.

இப்போது கிழிவதா? நாளை கிழிவதா? என்று கேட்பதுபோல் நைந்து தொங்கிக்கொண்டிருக்கும் அவரது மேல் "சேபி'யில் தட்டெழுத்தால் பதிக்கப்பட்ட சில ஆணைகளும், கோரிக்கைகளும் இருந்தன. அவை ஓய்வுகால உதவிப் பணத்திற்கான விண்ணப்பங்கள். மலையைக் கல்லி எலி பிடிப்பது போலிருந்தது அவர் நிலை. என் எதிர்காலம் அவர் நிலையில் பயங்காட்டியது. வளரும் கொள்கைகள், காலத்தை மாற்றும் என்ற நம்பிக்கையில், "போய் வருகிறேன் ஐயா!'' என்றேன்.

"என்ன தம்பி! ஒன்றும் சொல்லாமலே போய்வருகிறேன் என்கிறாயே? ஒவ்வொரு ஆசிரியனும் கல்வியைப பற்றிச் சிந்திக்கவேண்டாமா?'' என்று கூறியபடி என் முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அறுந்த கயிற்றால் பிணைக்கப்பட்ட கண்ணாடியின் ஊடே பாய்ந்த அவர் பார்வை; என் எண்ணங்களின் முடிவை முகத்திலேயே கண்டுவிட்டது போலும்! மனநிறைவு அவர் பார்வையில் வழிந்தது.

எதிரே பெரிய டிராக்டர்கள் நிலத்தை உழுவதைப் பார்த்துக் கொண்டே, கலப்பை பிடித்து ஏர் உழுதலையும், படித்தேன் — எனக்குப் பயிற்சியளித்த ஆதாரப் பயிற்சிப் பள்ளியில்.

வினாடிக்குப் பல கெசங்கள் நூற்கும் பெரிய பெரிய பஞ்சாலைகள் உள்ள, பெரியநாய்க்கன் பாளையத்தில்தான், "தக்ளியால் நூற்பது எப்படி'' என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தை விலைக்கு வாங்கிப் படித்து, நூற்கக் கற்றுக்கொண்டேன்.

அரிசி 'மில்'களும் 'ரோட்டரி'களும் நிறைந்துள்ள ஈரோட்டில்தான் 'சக்கி' என்ற மரத்திருகலில் நெல்லைக் கொட்டி அரைப்பதையும்; வார்தா செக்கின் மூலம் எண்ணெய் எடுப்பதையும் கண்டேன்.

கற்றுத்தரும் தொழில்முறை ஒருவிதமாகவும், நாட்டில் வளரும் தொழில்முறை வேறுவிதமாகவும் இருப்பதை என்னால் உணரமுடிந்தது. இன்னும் சில நாளில், உயர்நிலைப் பள்ளிகளில் என். சி. சி; ஏ. சி. சி. என்றெல்லாம் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறார்களே; அந்தத் துப்பாக்கி சுடும் பயிற்சி, அணிவகுப்பு, இதற்கெல்லாம் பதிலாக வில்வித்தை, அனுமான் சண்டை, என்றெல்லாம் புதுப் பயிற்சி முறைகள் ஏற்படுமோ! என்ற எண்ணம் வந்தது. ஆனால், என்ன பேசுவது?

வையாபுரியாரே தாம் ஆசிரியப் பணி ஆற்றும் வரையில் மௌனியாகத்தானே இருந்தார்—இருக்க வேண்டியிருந்தது!

ஆசிரியர்களின் நிலை எனக்குப் புரிந்தது, கல்விக்கூடங்களும், கல்விக் கொள்கைகளும் எந்த நிலையிலிருக்கின்றன என்பனவும் எனக்குப் புரிந்தன. சுழித்து வரும் பெருவெள்ளத்தைக் கடக்க, ஓட்டைப் படகில், உடைந்த துடுப்புகளைக் கொண்டு ஊட்டம் குறைந்தவனை ஓட்டச்சொல்லி விடுவது போல ஒரு நினைவு.

தெருவில் விளையாடிய சிறுவனுடன் வையாபுரியார் மண்வீடு கட்டி விளையாடினார். ஒரு வீட்டுக்கு நான்கு சுவர், ஒரு சுவருக்கு இரண்டு சன்னல் என்று விளையாட்டோடு பாடமும் அவர் வாயிலிருந்து வந்துகொண்டிருந்தது. அமைதியாக நடந்தேன்.

★

விருந்து—அந்நாளும் சரி, நடைமுறையிலும் சரி—தொன்றுதொட்டு நம்மிடை நிலவிவரும் இனிய தமிழ்ப் பண்பு. உள்ளங்கள் ஒன்றையொன்று தழுவியறிய, உள்ளங்கள் ஒட்டி இணைசேர, நட்புறவு பண்பட, பண்பட்ட அன்பு, வளங்கொண்டு வாழ—ஆகிய இத்தகைய 'குறிக்கோள்'களுக்கெல்லாம் அடித்தளம் பரப்பி நிற்பது-விருந்தோம்பல்.

ஓர வஞ்சனை!

—(ச. வெ. பாண்டியன்)—

"வடக்கு, இந்தப் பகுதியை ஒதுக்கியே வருகிறது; எல்லா வகைகளிலும் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டி வருகிறது என்ற பிரச்சாரத்தைத் தனது அமைப்புக்கள் மூலம் விடாது செய்து வருகிறது. 'காங்கிரசுக்'காரர்களுக்கு அதை மறுத்துச் சொல்ல வழியில்லை என்பதோடு, அவர்களால் 'வாயடைக்கச்செய்ய என்று'வடக்கிலிருந்து எதையும் வெற்றியுடன் கொண்டுவரவும் முடியவில்லை."

இது நமது கூற்றல்ல! நமது குறிப்பாயின் "பார் பார் இவர்களுக்கு எதை எடுத்தாலும் வடக்கு — தெற்கு என்ற வாதம் தான். வேறு எதுவுமே தெரியாது..." என்று "அகில இந்தியாக்கள்" பேசக்கூடும். ஆனால் இதில் பொதிந்திருக்கிற உண்மையை அவர்களால் மறைக்கவும் முடியாது!

நம்மவர் கூற்றல்ல என்றோம். பின் யார் குறிப்பு அது? சென்னையிலேயிருந்து வருகிற "பிராட்வே டைம்சு" (சூலை இதழ்)தான் "தி.க. வும், தி. மு. க.வும்" என்றகட்டுரையில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறது! இது நமது ஏடல்ல என்பதும் நம்மைஆதரிக்கின்ற பத்திரிக்கையும் அல்ல என்பதும் எவருக்கும் தெரிந்தஒன்றாகும். காங்கிரசுக்காரர்களின் அரவணைப்பும், பிரிந்த காங்கிரஸ்காரர்களின் தொடர்பும் இதற்கு உண்டு!

நம்முடன் மாறுபாடு கொண்ட இதழ்தான் நமது செயல் கண்டு இப்படிக்கூறியிருக்கிறது. ஆமாம்! உண்மையையாரால் எத்தனை நாட்களுக்குத்தான் மறைக்கமுடியும்!

நாம் வடக்கின்வஞ்சனை குறித்து விடாது பேசுகிறோமாம், இதை மறுப்பதற்கு காங்கிரஸ்காரர்களுக்கு 'வக்கு' இல்லையாம், "ஓர வஞ்சனை காட்டுகிறது என்கிறீர்களே, இதோ பாருங்கள் மத்திய அரசினிடமிருந்து தமிழகத்திற்கு நாங்கள் கொண்டுவந்திருக்கிற திட்டத்தை" என்று எடுத்துக்காட்டவும் எதுவும் இல்லையாம்! விளக்கமாகவே தருகிறது இச்சேதியை!

ஆம்! யாரால்தான் இந்த உண்மையை மறைக்கமுடியும்? 'ஆச்சாரியார்' எப்படிப்பட்ட 'எதிரி' நமக்கு! அவரே "இது உண்மைதான். இனிப் போராடினால்தான் உண்டு" என்று கூறவில்லையா? வணிகர்கள், தொழில் வல்லுநர்கள் அத்தனை பேரும் இந்த உண்மையைக் கூறவில்லையா?

'டெல்லி', பம்பாய் போன்ற இடங்களிலிருந்து வருகிற ஏடுகள் கூட இந்த நியாயம் பற்றி எழுதத் தலைப்பட்டுவிட்டனவே! ஏன் நமது மந்திரிகள்கூட வீராப்புக்காக நம்மை எதிர்த்துப்பேசினாலும் சிற்சில இடங்களில் உண்மையை அவர்களையும் அறியாமல் சொல்லிவிடவில்லையா?

இவைகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன? நமது கூற்றிலே உள்ள நியாயம்என்பதைத்தான். இதை விளக்க நாம் காட்டிய விளக்கங்கள், புள்ளிவிபரங்கள் ஏராளம், ஏராளம்!

இதோ மீண்டும் டில்லி ஓரவஞ்சனை காட்டுகிறது என்று காட்டத்தக்க விதத்தில் ஒரு புள்ளிவிபரம் கிடைத்திருக்கிறது. சர்க்கார் வெளியீடு ஒன்றில் கண்டவிபரம் தான் இது!

வேளாண்மையைப் பெருக்குவதற்கு என்றுபெரிய அணைக்கட்டுத் திட்டங்களையும், அந்தவிதஅணைக் கட்டுத் திட்டங்களிலிருந்துமின்சாரம், உரம் போன்றவைகள் தயாரித்தல் ஆகிய, பலநோக்குத் திட்டங்களையும் டெல்லி திட்டமிட்டுச் செய்து வருகிறதல்லவா? அதில் இந்த இரண்டு ஐந்தாண்டுத்திட்ட காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்ட அணைக்கட்டுகள், பலநோக்குத்திட்டங்கள் எவை, எவை, உருவாகிக் கொண்டிருப்பவைகள், உருவாகக் கூடியவைகள் எவை, எத்தனை, எங்கெங்கு என்ற விபரத்தைப் பார்த்தால் நாம் எவ்வளவுதூரம் வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம்—ஒதுக்கப்பட்டிருக்கிறோம் என்ற வேதனை தரும் உண்மையைக் காண முடியும். இதோ விபரங்கள்:—

கட்டி முடிக்கப்பட்ட திட்டங்கள்.

மேற்கு வங்காளம், பீகார்:

1. டிட்டார்யா அணைக்கட்டும், மின்சார உற்பத்தி நிலையமும்.
2. கோனார் அணைக்கட்டு
3. மெய்த்தான் அணைக்கட்டும், மின்சார உற்பத்தி நிலையமும்.
4. துர்க்காபூர் அணைக்கட்டு.
5. மயூராக்கித் திட்டம்.

பஞ்சாப்:

1. ஆர்க்கி அணைக்கட்டு.

தமிழகம்:

1. கீழ்பவானி.
2. மணிமுத்தாறு.

மைசூர்:

1. காட்டபிரபா கால்வாய்த்திட்டம்

வேலை நடந்துகொண்டிருக்கும் திட்டங்கள்.

மேற்கு வங்காளம், பீகார்:

1. தாமோதார் பள்ளத்தாக்குத் திட்டம்.
2. வான்செட் மலை அணைத்திட்டமும், மின்சார உற்பத்தித்திட்டமும்.
3. தாமோதார் திட்டத்திலிருந்து மின்சாரம் பெறுவதும், வழங்குவதும் ஆன திட்டம்.
4. பொக்காரோ 4வது அமைப்புத் திட்டம்.
5. துர்க்காபூர் மின்சார உற்பத்தித் திட்டம் (இரு அமைப்புகள்)
6. சண்டர்பூரா மின்சாரத் திட்டம்.

மேற்குவங்கம் (தனியே)

1. காங்சாபதி திட்டம்.

பம்பாய்:
1. கொய்னு மின்சார உற்பத்தித் திட்டம்.
2. காக்ராபார் திட்டம்.
3. மாகி வலக்கரை கால்வாய்த் திட்டம்.
4. கிர்னுத் திட்டம்.
5. விர் திட்டம்.
6. காடக்வாசலா திட்டம்.
7. பூர்னுத் திட்டம்.

கேரளம்:
1. மலம்புமாத்திட்டம்.

மைசூர்:
1. பட்டரா திட்டம்.
2. காட்டபிரபாத் திட்டம் (இரண்டாம் பகுதி)
3. துங்கபத்திராத் திட்டம் (ஆந்திராவின் இணைந்ததிட்டம்)

ஒரிசா:
1. கிராகூட் அணைக்கட்டுத் திட்டம், மின்சார உற்பத்தித் திட்டம்.
2. மகாநதி "டெல்டா" வேளாண்மைத் திட்டம்.

பஞ்சாப்:
1. பக்ராநங்கல் திட்டம்.
2. கிர்கிண்ட் திட்டம்.

ஆந்திரா:
1. நாகார்ச்சுனசாகர் திட்டம்.

இராசஸ்தான்:
1. ராசச்தான் வாய்க்கால் திட்டம்.
2. சாம்பல் திட்டம் (ம. பி-யுடன் இணைந்து)

பீகார்:
1. கோசித்திட்டம்.

உ. பி:
1. ரீகண்ட் அணைத்திட்டம்.
2. சார்தசாகர் திட்டம் (இரண்டாம்பகுதி)
3. மாத்ததிலி திட்டம் (,,)
4. ராம்கஸ்காத்திட்டம்.

ம. பி:
1. சாம்பல் திட்டம் (உ. பி. இராசஸ்தான் ஆகியவற்றுடன் இணைந்து)

பரிசீலனையிலிருக்கிற திட்டங்கள்.

ஆந்திரா:
1. வெட்டின்கிண்டா விவசாயத் திட்டம்.
2. சுவரன்நகர்க்கா வாய்க்கால் திட்டம்.

பம்பாய்:
1. மெக்கிரி திட்டம்.
2. போரி ,,
3. சுக்கா ,,
4. எர்பாட்ரா ,,
5. கோகாத்தி ,,
6. பிண்டராபோடி திட்டம்
7. எக்பூரிசி ,,
8. தினநாடி ,,
9. ஐதியாடோ ,,
10-கேட்பூரனு ,,
11-பாட்கு ,,

ம. பி:
1. பின்கால் நாலாத் திட்டம்.
2. பம்பாவதித் திட்டம்.
3. வென்சுகாதி திட்டம்.
4. அப்பர்கென் திட்டம்.
5. காசிடியோபலநோக்குத்திட்டம்
6. பாத்திட்டம்.
7. அப்பர்வின் கானுத்திட்டம்.
8. சாகர்த் திட்டம்.
9. கல்லாலித் திட்டம்.
10. கோலார் திட்டம்.
11. காசியாரி திட்டம்.
12. பாரெய் வாய்க்கால்திட்டம்.

தமிழகம்:
1. பரம்பிக்குளம் சோலையாறு பலநோக்குத் திட்டம்.

பஞ்சாப்:
1. பாரிடோல் வாய்க்கால் திட்டம்.

இராசஸ்தான்:
1. பானுச்திட்டம்
2. சாக்காம் திட்டம்.
3. சாபி திட்டம்.
4. பாண்டி திட்டம்.
5. சாகர்மதி நதியில் நீர்த்தேக்கத் திட்டம்.
6. கூர்க்யான் வாய்க்கால் திட்டம் (பஞ்சாப், ராசஸ்தான் ஆகியவற்றுடன் இணைந்து.)

அசாம்:
1. கொப்பிளி பலநோக்குத்திட்டம்
2. யமுனுத் திட்டம்.
3. டிகாஸ் பகுதி விவசாயத் திட்டம்.
4. சுபான் சிரித் திட்டம்.

ஒரிசா, ஆந்திரா:
1. வம்சதாரா பலநோக்குத் திட்டம்.

பம்பாய், உ. பி.:
1. நர்மதா மின்சார உற்பத்தித் திட்டம்.

மேற்கு வங்காளம், பீகார்:
1. கோனுர் மின்சார உற்பத்தித் திட்டம்.

மைசூர், ஆந்திரா:
1. துங்கபத்திரா உயர்தர வாய்க்கால் திட்டம்.

ஒரிசா:
1. பிபல்பன்காத் திட்டம்.
2. பாகுராத் திட்டம்.

இதுநாள் வரையும் கட்டி முடித்திருக்கிற—கட்டி முடிந்துக்கொண்டிருக்கிற—கட்ட இருக்கிற திட்டங்களின் விபரம்தான் மேலே கூறப்பட்டவைகள், வேளாண்மையைப் பெருக்குவதற்காக அணைக்கட்டுகள் கட்டுதல், கால்வாய்கள் வெட்டுதல் போன்ற திட்டங்கள், மின்சார உற்பத்தித் திட்டங்கள் போன்றவைகளின் விபரத்தைத் இது நன்கு காட்டுவதாகும்!

கோடி கோடியாகக் கொட்டிச் செலவழிக்கப்பட்ட பணம் 'நமக்கு' அல்ல என்பதை எவரும் எளிதில் உணரலாம்! கட்டி முடிக்கப்பட்ட திட்டங்கள் மொத்தம் 9 என்றால் அதில் 'திராவிடம்' பெற்றிருப்பது 3 ஆகும்! தமிழகத்திற்கோ 2. அதுவும் பவானியும், மணிமுத்தாறும்; 13 கோடிக்கு உள்பட்டதாகத்தான் இருக்கும். வடக்கே உள்ள திட்டங்களோ 30 கோடி, 50 கோடி 70 கோடி என்ற அளவில் உள்ளன.

இப்பொழுது கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற திட்டங்களாலும் இந்த நிலைதான். மொத்தத்திட்டங்கள் 31. இதில் திராவிடத்திற்கு 5-திட்டங்கள் மாத்திரமே! **அதிலும் தமிழகத்திற்கு ஒரு திட்டமும் கிடையாது.** இதில் 'நாகார்ச்சுனசாகர்' திட்டம் மாத்திரம்தான் சற்று உயர்ந்த திட்டம் எனலாம் — தென்னகத்தைப் பொறுத்தமட்டில். ஆனால் வடக்கிலோ ஒரே ஒரு "கிராகூட்" திட்டத்திற்கு மாத்திரம் 174-கோடி ரூபாய்! தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம் 110-கோடி என்றிருந்தது இப்போது 130-கோடி என்ற அளவில் வந்து நிற்கிறது. இதே போல்தான் எல்லாத் திட்டங்களும் இருக்கின்றன!

சரி! இதுதான்போகட்டும் பரிசீலனையிலிருக்கிற திட்டங்களிலாவது 'திராவிடத்திற்கு' முக்கியத்வம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை. பரிசீலனையிலிருப்பவைகள் 43-திட்டங்கள். அதில் தமிழகத்திற்கு 1-ம், ஆந்திரத்திற்கு 2-ம் தான் கிடைத்திருக்கிறது. **43-க்கு 3-தான் நமக்கு!** மற்றப்படி மைசூரும், ஆந்திராவும் இணைந்து ஒரு திட்டமும், ஒரிசாவும் ஆந்திராவும் இணைந்து ஒரு திட்டமும் இருக்கிறது அவ்வளவுதான்.

இந்தியா ஒன்று என்று பேசுகிருர்கள்! இதுகாறும் 'திராவிடம்' பெற்ற பேறு இதுதானு! கையைப் பார்ப்பதற்குக் கண்ணுடி தேவையில்லை! 'திராவிடம்' வஞ்சிக்கப்படுகிறது என்பதற்கு வேறு விளக்கமும் தேவையில்லை.

4-ம் பக்கத் தொடர்ச்சி

விண்ணிலே சிரித்து மகிழ்ந்து, கண்சிமிட்டிக் களிப்படையும் விண்மீன்களுக்கிடையே, தண்ணொளி வீசிவரும் பொன்னிலவு பவனி வந்துகொண்டிருப்பதைக் காண்கின்றன, களிறுகள்!

காரிருளகற்றிப் பேரொளி பரப்பி, புவனமெங்கும் பவனி வந்துகொண்டிருந்த வெண்ணிலவு, களத்திடையே காலால் இடறி எறியப்பட்ட மன்னர்களின் வெற்றக் குடையாகத் தோன்றுகிறதாம், களிறுகளுக்கு! உடனே அடங்காத ஆத்திரத்தால் ஆர்த்தெழுந்து, பொன்னிலவைக் கிழித்தெறிய துதிக்கையை எட்டி நீட்டுகின்றன'' என்று, எண்ணத்தைக் கரும்பாக்கிக் கன்னித் தமிழிலே வெண்பாயாத்துள்ளான் கவிஞன். அப்பாடலை ஈண்டு பாருங்கள்:

''விறுசால் மன்னர் விரிதாம வெண்
குடையைப்
பாற எறிந்த பரிசயத்தால்—தேறுது
செங்கண்மாக் கோதை சினவெங் களியானை
திங்கள்மேல் நீட்டும்தன் கை''

[பாறை! வீறுசால்—பெருமை மிக்க, தாமம்—மாலை, பாற—நொறுங்க]

இயற்கையாகவே யானைகள், பொன்னிலவைக் கண்டால் துதிக்கையைத் தூக்கி ஆட்டி மகிழ்வது வழக்கம்! அக்காட்சியைக் காண்கின்ற புலவன், தன் குறிப்பை யானைமேல் ஏற்றி, சூழ்நிலைக்கேற்ப எடுத்துரைத்துள்ளமை பாராட்டிற்குரிய ஒன்ருகும்!

நிலவைக்கண்டு நீள்கரம் நீட்டிய யானைகளை மாற்றரசின் வெண்கொற்றக்குடையோவெனக்கொதிப்படைந்து துதிக்கைகளை நீட்டியதாகக் காட்டி, கன்னித் தமிழகத்தாரின் வீரத்திற்குச் சற்றும் குறைந்ததல்ல சேர நாட்டு களிறுகளின் வீரம்; என்பதை விளக்கிக் காட்டுகின்ற தன்மை பாராட்டிற்குரிய ஒன்று! இத்தகு காட்சிக்குப் பின், போரில் பாதிக்கப்பட்ட நாட்டின் நிலையையும் பாருங்கள்!

போர் முடிந்தது. எங்கும் பொங்கும் குருதி தங்கி உறைந்துகாணப்பட்டது. வண்ணமலர்ச் சோலைகள் மண்ணோடு மண்ணாகி மடிந்தன. வளம்பெற்று வாழ்ந்த நாடு வறண்டுபோன பாலையாக—மணற்பரப்பாக மாறியது! வெகுண்டெழுந்தோனின் வீரவிளையாட்டின் விளைவுகள்தான் இப்படி! இந்தக் கொடுமையை—அடாத செயலைக் கண்டார் செந்தமிழ்க் கவிஞர் ஒருவர். கண்கள் காட்டாறுபோல் கண்ணீரை உகுத்தன; நெஞ்சம் விம்மி வேதனைப்பட்டார்; வேதனையோடு கோதையைக் காணப் புறப்பட்டார்.

சீறியெழுந்த சிற்றெறும்புக்கூட்டத்தைக் குலைத்து, கூற்றுக்கு ஏற்றதொரு விருந்தாக்கி, வீரமுரசு கொட்டி, வெற்றிப்புன்னகை பூத்துப் புளகாங்கிதமுற்றவண்ணம் அமர்ந்திருந்தான் கோதை!

அவன் முகத்திலே மகிழ்ச்சி மங்கை மலர்தூவிக்கொண்டிருந்தாள்! அந்த மகிழ்ச்சியிலே தன்னை மறந்து—இந்த உலகையே மறந்திருந்தான். புலவர் கண்டார் கோதையை!

வேதனையால் வெந்து நொந்து வந்த புலவர், உள்ளத்தே ஊறி வந்த உணர்ச்சிகளை வண்ணத் தமிழாரமாகத் தொடுத்துரைக்கிருர்:

''கொங்கு நாடு தந்த கோதைப் பெருமானே! உன் சீற்றத்திற்கும், சிவந்த விழிகளுக்கும்வீழ்ந்துபட்டு, அழிவுற்ரோரின் நாட்டு நிலையைக் கேள்! சூளுரைத்தெழுந்த உன் வாளுக்கும், வேலுக்கும் வீழ்ந்துபட்டோன் மன்னன் மட்டுமனறு; கண்ணைக் கவர்ந்திழுத்து, எண்ணத்தில் எழுச்சியூட்டும் வண்ண மலர்ப் பொய்கை போன இடம் தெரியவில்லை;'சலசல'க்க ஓடிவந்த சிற்றருவி வற்றி வறண்டு, மணற்பரப்பாய் மாறிவிட்டது! அதனல் பூத்துக்குலுங்கிப் புத்தின்பமூட்டிய புதுமலர்ச் சோலையும் பாலையாகி விட்டது. காரணம், கொடியும், செடியும் படர நீரூற்ற ஆளில்லாத குறைதான்! இப்போது, கடுமுள்ளிச் செடிகள் செழித்து வளர்ந்து அதுவும் மறைந்தவண்ணமிருக்கின்றன. முள்ளிச் செடியும் தீய்ந்து காய்ந்துபடத் தொடங்கி விட்டது. அங்கு வாழ்ந்துகொண்டிருந்த சிறுநரிக் கும்பலும் இருக்க இடமின்றியும், உண்ண உணவுக்கு வழியின்றியும் மருண்டு மருண்டு ஓடிக்கொண்டிருக்கின்றன!' என்று

இக்கருத்தை எழிலுற எடுத்துக் காட்டி, இன்பமூட்டிக்கொண்டிருக்கும் இன்தமிழ் செய்யுளைப் பாருங்கள்:

''கரிபரந்(து) எங்கும் கடுமுள்ளி பம்பி
நரிபரந்து நால்திசையுங் கூடி—எரிபரந்த
பைங்கண்மால் யானைப் பகையடுதோன்க்
கோதையை
செங்கண் சிவப்பித்தார் நாடு.''

போரின் விளைவைப் புலவர்பெருமான் விளக்கிக் காட்டுவதிலே வல்லவர் என்பதற்கு, நல்லோர் நடமாடிய நாட்டில் நச்சுமனம் படைத்த நரிகள் ஓடுவதை வெளிப்படுத்துகின்ற தன்மையும், ஏரியும், ஆறும் வற்றி வறண்டு மணற்பாங்காகிவிட்டதென்பதை எடுத்துரைக்கின்ற தன்மையும் போதுமானதாக—தனித் தன்மை வாய்ந்ததாகத் திகழ்கிறது!

பண்டைக் காலத்தே, பைந்தமிழ் மறவர் தங்கள் உரிமையை—நாட்டின் நலனைக் காப்பதற்கென்று களம் நோக்கிவிட்டால், வெற்றி அல்லது தோல்வி, இவ்விரண்டில் ஒன்றே குறிக்கோளெனக்கொண்டு வீரப்போர் புரிந்து வந்திருக்கின்றனர் என்பதற்கு மேலே காட்டப்பட்ட பாடல்கள் தக்க சான்றுகளாக வரலாற்றுக் குறிப்புக்களாகத் திகழ்கின்றன என்பதை யாரே மறுக்க வல்லார்!

சேரநாட்டு மக்களும், சேரநாட்டுக் களிறுகளும், சேரன் கோதையும் எத்தன்மை வாய்ந்தோர் என்பதையும், திறைசெலுத்த மறுத்துரைத்த மன்னரும் — மக்களும் எப்படிப்பட்டவர்கள்— எத்தகைய ஆற்றல் கொண்டோர்கள் என்பதையும் புலவர்கள் விட்டுச்சென்ற சேரனைப்பற்றிய பாடலிலிருந்தும் அறிந்துகொண்டோம். இனி, சோழநாட்டுக்களத்து நிகழ்ச்சியையும், மக்கள் சக்தியையும் அடுத்தடுத்துக் காண்போம்!

★